

HEROES OF THE FAITH
Moses
FRIEND OF GOD

**www.jesussoldierindia.com** என்ற தமிழ் கிறிஸ்தவ இணையதளத்தில் **தலைவ(தகப்ப)னாகிய மோசே** என்ற தலைப்பில் ஏழு பாகங்களாக வெளியிடப்பட்ட மோசேயை குறித்து தியானங்கள் தொகுத்து இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தியானித்து பயன்பெறுங்கள்.
ஆண்டவருக்கே மகிமையுண்டாவதாக.

# தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 1



வேதாகமம் முழுவதும் தலைவனாக, அரசனாக, நியாதிபதியாக, தீர்க்கதரிசியாக இருந்து தேவ ஜனங்களை பல்வேறு சூழ்நிலைகளில் வழி நடத்தியவர்கள் பலர் உண்டு. ஆனால் தகப்பனாக இருந்து நடத்தியவர்கள் மிகச் சிலரே. அவர்களின் ஒருவர் தான், சர்வ இஸ்ரவேலையும் 40 ஆண்டு காலங்கள் எகிப்தில் இருந்து கானான் தேசம் வரை வழி நடத்தி வந்த மோசேயாகும். ஆம் தேவனால் நேரடியாக அழைக்கப்பட்டு, இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒவ்வொரு நாளும் இஸ்ரவேலரை வழிநடத்தியவர் மோசேயாகும். வேதத்தின் முதல் ஐந்து ஆகமங்களான பஞ்சாகமங்களும், மோசேயினால் எழுதப்பட்டது என்பது யாவரும் அறிந்த ஒன்று. அவற்றில் உலக சிருஷ்டிப்பும் முற்பிதாக்களின் வரலாறும் முதல் ஆகமமான ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நான்கு ஆகமங்களும் இஸ்ரவேலரின் பயணத்தை பற்றிய மற்றும் அதனை சார்ந்த விஷயங்களைப் பற்றியே கூறுகிறது. மோசே பிறந்த இக்கட்டான சூழ்நிலை பற்றியும், அவர் எவ்வாறு தேவனால் காக்கப்பட்டு பார்வோன் அரண்மனையில், பார்வோன் குமாரத்தியின் மகனாகவே வளர்க்கப்பட்டார் என்பது பற்றியும், அவர் எதற்காக எகிப்தை விட்டு ஓடி மீதியானில் தஞ்சம் அடைந்தார் என்பதையும், ஆக அவருடைய முதல் எண்பது ஆண்டு வாழ்க்கை முழுவதும் ஒரு சிறு அதிகாரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம் அவருடைய முதல் 80 ஆண்டு கால வாழ்க்கை முழுவதிலும் ஆண்டவர் அவர் வாழ்க்கையில் அமைதியாகவே செயல்பட்டார். அவர் அவ்வளவு காலம் எவ்வாறு தேவனை வழிபட்டார் என்பது கூட பதியப்படவில்லை. காரணம் தேவன் முற்பிதாக்களின் காலத்திற்கு பின்

ஏறக்குறைய 450 ஆண்டுகள் வரையிலும் யாருடனும் இடைபடவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அமைதியாக ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசேயை ஆண்டவர் அழைத்தார். அன்றிலிருந்து ஆரம்பித்த மீட்பின் பயணம், இன்று வரை சரீர பிரகாரமாகவும் (இஸ்ரவேலருக்கு), ஆவிக்குரிய பிரகாரமாகவும் (ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நமக்கு) தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. நாம் இருக்கும் இந்த கிபி 2025 ஆம் ஆண்டிலும், இஸ்ரவேலரும் (கானானுக்காக), ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாமும் (பரம கானானுக்காக) போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். அன்று மோசேயின் மூலம் விடுதலைப் பயணத்தை ஆரம்பித்த தேவன் இன்றும் அதை பலரைக் கொண்டு நம்மில் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார். குறிப்பாக மோசேயின் மூலமாக நடந்த அந்த முதலாவது விடுதலைப் பயணம், அவரது வாழ்க்கையின் இறுதி 40 ஆண்டுகளை பற்றி (80 - 120 வயது) நான்கு ஆகமங்களிலும் நமக்கு அறிய தருகிறது. அவர் எவ்வாறு தலைவனாக மாத்திரமல்ல, இஸ்ரேல் மக்களுக்கு ஆவிக்குரிய தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார் என்பதை நாம் காணலாம். அப்படிப்பட்ட தலைவர்கள் (தகப்பன்மார்கள்) இந்த கடைசி காலத்தில், ஆவிக்குறிய இஸ்ரவேலராகிய நாம், பரம கானானைச் சென்றடைய மிகவும் தேவைப்படுகின்றனர். இப்பொழுது நாம் மோசே எவ்வாறு தலைவனாய் மாத்திரம் அல்ல, இஸ்ரவேலருக்கு தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார் என்பதை பின்வருமாறு விரிவாக தியானிப்போம்,

**யாத்திராகமம் 3:1-4** வசனங்கள் கூறுகிறது **“மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான். அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான். அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.“**. இங்கு ஓரேப் பர்வதத்தில் அமைதியாக தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மோசே மேய்த்துக் கொண்டிருப்பதை காணலாம். தன்னுடைய முதல் 40 வருட வாழ்க்கையை முற்றிலும் மறந்தவராக, தன்னுடைய அடுத்த 40 வருட வாழ்க்கையை அவர் இவ்வாறாக ஆடுகளை மேய்ப்பதிலேயே கழித்தார். ஆகிலும் **யாத்திராகமம் 2:22** கூறுகிறபடி **“நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி, அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்.“**, தான் இருக்கும் இந்த இடம் தனக்குரியது அல்ல என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது, கெர்சோம் என்று தன் மகனுக்கு பெயர் வைத்ததிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். தன் மக்கள் அனைவரும் (அவர் குடும்பம் உள்பட) எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தும், ஒன்றும் செய்ய இயலாதவராய் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். தன் வாழ்க்கையில் மூன்றில் இரண்டு பங்கு வாழ்க்கையை (எண்பது வருட

வாழ்க்கையை) வாழ்ந்து முடித்திருந்த அவர், இனி தன் வாழ்வில் ஏற்பட போகும் மாற்றத்தை குறித்து சற்றும் எதிர்பாராதவராய் இருந்தார். இங்கு ஆண்டவர் கர்த்தருடைய தூதரானாவராகவும், கர்த்தராகவும் ஆபிரகாமுக்கு தன்னை வெளிப்படுத்தியது போல, இங்கு மோசேக்கும் தரிசனம் ஆனார். முட்செடி நடுவில் இருந்து தேவன் அவரை நோக்கி மோசே என்று கூப்பிட்டார். இங்கு ஆண்டவர் கூப்பிட்ட மாத்திரத்தில், ஆண்டவரே நீர் யார் என்று கூட அவர் கேட்கவில்லை, உடனடியாக இதோ அடியேன் என்று சொல்லி தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார். தேவன் அவருக்கு தம்முடைய அனாதி திட்டத்தினை வெளிப்படுத்தி, தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும் வாக்குதத்தம் பண்ணின, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு, இஸ்ரவேல் மக்களை வழிநடத்திச் செல்லும் தலைவனாக ஆண்டவர் மோசேயை அழைத்தார்.


ஆனால் அவரோ, **"அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான்." (யாத்திராகமம் 3:11).** ஆனாலும், அவரை அழைத்த தேவன் தம் நாமத்தை அவருக்கு வெளிப்படுத்தி, அடையாளங்களையும் அவர் கையில் கொடுத்தார். இருப்பினும் **"அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான்." (யாத்திராகமம் 4:10).** ஆனால் ஆண்டவரோ, **"அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்." (யாத்திராகமம் 4:11,12).** ஆனால் மறுபடியும் மோசே **"அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்." (யாத்திராகமம் 4:13). "அப்பொழுது கர்த்தர் மோசேயின்மேல் கோபம்மூண்டவராகி: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டுவருகிறான்; உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும். நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன். அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய். இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார்." (யாத்திராகமம் 4:14-17).** இங்கு மிக நீண்ட சம்பாஷணைக்கு பிறகு, மோசே ஆண்டவருடைய வேலையை செய்ய தன்னை அர்பணித்தாலும், இங்கு ஆண்டவர் அழைத்தபடி, தன் மக்களுக்கென அவர் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பின்பு, அவர் வாழ்நாளின் இறுதிவரை அந்த பணியை தொடர்ந்து செய்தார். பார்வோனின் மூலமாக, அன்னிய ஜனங்களின் மூலமாக, தன் சொந்த ஜனங்களின் மூலமாக, தன் வீட்டார் மூலமாகவும், எத்தனையோ இன்னல்களை,

எதிர்ப்புகளை அவர் சந்தித்த பொழுதும், ஆண்டவர் கொடுத்த இந்த பணியை விட்டு அவர் விலகவில்லை. ஆண்டவரே, இந்த ஜனங்களை விட்டுவிடு நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன், என்று கூறிய பொழுது கூட அவர் தன் ஜனங்களை வழிநடத்துவதை விட்டு விலகவில்லை. இதுவே அவர் தலைவனாக மாத்திரமல்ல, தன் ஜனங்களுக்கு தகப்பனாகவும் இருந்து அவர்களை நடத்தினார் என்பதற்கு சான்றாகும்.

ஆம் ஜனங்களை வெறுமனே நடத்திச் சென்றது மட்டுமல்ல, ஆண்டவரிடமிருந்து 10 கற்பனைகள் உட்பட அனைத்து நியாயப்பிரமாண முறைகளையும் பெற்று, அதை தன் ஜனங்களுக்கு தந்தார். செங்கடலை பிளந்து ஜனங்களை நடத்திச் சென்று, வான மன்னாவை தேவனிடத்தில் பெற்று தன் ஜனங்களை போஷித்தார். ஒவ்வொரு முறையும் சிறுபிள்ளைகளை போல, இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்த போதும் தகப்பனைப் போல அவர்கள் தேவையறிந்து, அதற்காக தேவனிடத்தில் மன்றாடி, அவர்களின் ஆவிக்குரிய தேவைகளையும், பூமிக்குரிய தேவைகளையும் ஒவ்வொரு நாளும் சந்தித்தார். அவர்களை கண்டிக்க வேண்டிய நேரத்தில் தகப்பனை போல அவர்களை கண்டித்து, அதே நேரத்தில் அவர்கள் செய்த தவற்றினால் உண்டான வேதனையை தாமும் சுமந்தார். ஆம் 40 வருடங்கள் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களின் கீழ்ப்படியாமையால், அவர்களை வனாந்தரத்தில் நடத்தின பொழுது, அவர்களோடு சேர்ந்து மோசே வனாந்தரத்தில் இருந்தார். ஆண்டவர் ஆரோனையும் அவன் சந்ததியாரையும் ஆசாரிய பட்டத்திற்கு தேர்ந்தெடுத்த பொழுது, அவர் தனக்காகவோ தன் சந்ததியாருக்காகவோ எதையும் தேவனிடத்தில் வேண்டவில்லை. ஆவிக்குரிய காரியத்தில் ஜனங்களை நடத்த ஆரோன் அபிஷேக்க பட்டது போல, தனக்குபின் தன் ஜனங்களை தலைவனாக இருந்து நடத்த யோசுவாவையும், மோசே உருவாக்கினார். ஆண்டவர் அழைத்த அந்த ஒரு அழைப்பிற்காக தன்னையே அர்ப்பணித்த அவர், அந்த ஊழியத்திற்காக எப்படிப்பட்ட சூழ்நிலையையும் கடந்து செல்ல தயாராக இருந்தார். ஆனால் அதே நேரத்தில் ஊழியத்தின் மூலம் தனக்கென எவ்விதத்திலும் அவர் ஆதாயத்தை எதிர்பார்க்கவில்லை. தேவ ஜனங்களை தன் சொந்த பிள்ளைகளாக பாவித்து, தேவன் கொடுத்த ஊழியத்தை, ஒரு குடும்பத்தை, தகப்பனாக இருந்து நடத்துவதைப் போல, அவர் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தினார்.

அதனால் தான் ஆண்டவரே அவரைக் குறித்து சாட்சி கொடுத்தார். கர்த்தருடைய பர்வதத்தில் மகிமையான அனுபவங்களை பெற்று தேவ மகிமையை தன் சரீரத்தில் தாங்கினவராக, மற்றவர்கள் அந்த மகிமைக்கு முன்பு நிற்க முடியாததால், தன் முகத்தை முக்காட்டிட்டு மறைத்துக் கொண்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூப மலையில், மகிமையை அடைந்த பொழுது, அங்கும் அவரோடு காணப்பட்டார். ஆம் அவர் ஊழியம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. வேத பண்டிதர்கள் கூற்றுப்படி, வெளிப்படுத்துன விசேஷத்தில் கூறப்பட்டுள்ள, மகா உபத்திரவக் காலத்தின் இரண்டு சாட்சிகளில் ஒருவராய் இருந்து, அவர் ஊழியத்தை நிறைவேற்றுவார். இவ்வாறு தன்னையே முற்றிலுமாய் அர்ப்பணித்த மோசேயின் மரணம் கூட மகிமையானதாக இருந்தது. ஆம் ஆண்டவர் மோசேயின் சரீரத்தை கூட யாரிடமும் கொடுக்கவில்லை.

**உபாகமம் 34:5,6** கூறுகிறது **“அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.“** ஆம், ஆண்டவர் எவ்வாறு அவர் சரீரத்தை அடக்கம் பண்ணினார் என்பதை ஒருவரும் அறியார். தனக்கென்று, தன் ஆவி, ஆத்துமா, சரீரம், வாழ்க்கை என அனைத்தையும் அர்ப்பணித்த மோசேயின் மண்ணான சரீரத்தைக் கூட, ஆண்டவர் பாதுகாத்தார். காரணம், அந்த மண்ணான சரீரத்திலே, தேவ மகிமை விளங்கும்படியாய் அவர் வாழ்ந்தார். அவர் செய்த ஊழியத்தின் காரியங்களை பின்வரும் பாகங்களில் விரிவாக காண்போம். ஆண்டவர் தாமே மோசேயை போல, நாமும் தேவனுக்கென வாழ்ந்திட, அவர் ஊழியம் செய்திட, அதை அவர் சித்தப்படியே செய்திட, தேவ மகிமையை சுமந்தவர்களாய், தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள ஊழியனாகிய மோசேயை காட்டிலும், தேவனை அப்பா பிதாவே, என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரத்தை உடையவர்களாய், அவருக்கென வாழ தேவன் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.



தேவனாகிய கர்த்தர் மோசேயைக் கொண்டு, இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து மீட்டு இரட்சிப்பதற்காக எவ்வாறு அழைத்தார் என்பதையும், அந்த உன்னதமான பணிக்காக அவர் எவ்வாறு தன்னை அர்ப்பணித்தார் என்பதையும் பாகம் ஒன்றில் கண்டோம். இவ்விரண்டாம் பாகத்தில் அவர் இஸ்ரவேல் மக்களை தலைவனாகவும், தகப்பனாகவும் இருந்து எவ்வாறு வழிநடத்தினார் என்பதை காண்போம். இஸ்ரவேல் மக்களை பல்வேறு இன்னல்களுக்கு, வாதைகளுக்கு பிறகு, பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிட்டு, கடினப்பட்டிருந்த பார்வோனின் இருதயத்தை உடைத்தெறிந்து, எகிப்தியரின் வெள்ளியையும் பொன்னையும் பெற்று, **“இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள்; அவர்கள், பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள். அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டு வந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றுமுப்பது வருஷம். நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது.“, (யாத்திராகமம் 12:37-41)**. இப்படி மிக அருமையாக, தேவ வழிநடத்துதலின்படி எகிப்தை விட்டு புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை, **“அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட**

**அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை.“ (யாத்திராகமம் 13:21,22).** இங்கு அருமையாக மோசேயின் தலைமையில் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை மீட்டெடுத்து, அடிமையான எகிப்தில் இருந்து சுதந்திரமான பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு வழி நடத்தினார். இங்கு அவர்கள் தொடர்ந்து ஆண்டவர் கூறியபடி, மோசேக்கு கீழ்ப்படிந்து நடந்திருப்பார்களானால், கானானை சில நாட்கள் அல்லது மாதங்களுக்குள்ளாக அடைந்திருக்கலாம். ஆனால் அவர்களோ தங்கள் முரட்டாட்டத்தினால், கீழ்ப்படியாமையினால் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்த பின்னரே கானானை அடைந்தனர். ஆகிலும் அந்த 40 வருட காலமும் ஆண்டவர் மோசேயை உபயோகித்தார். ஆம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், மோசே தன்னை ஒரு தலைவனாக, தகப்பனாக முன்னிறுத்தி, இஸ்ரவேல் மக்களை 40 வருட காலம் சிதறாமல், யார் கையிலும் அடிமைப்படாமல், அவர்கள் கர்த்தரை விட்டு விலகினாலும் அவர்களுக்காக மன்றாடி மறுபடியும் அவர்களை கர்த்தரிடம் திருப்பி, இவ்வாறு தலைவனாக, ஆசாரியனாக, தீர்க்கதரிசியாக எல்லாவற்றிற்கும் மேலாக தகப்பனாக இருந்து அவர்களை வழிநடத்தினார். அவற்றை ஒவ்வொன்றாக நாம் பின்வருமாறு காண்போம்.

முதலாவது, அவர்கள் விடுதலை பெற்று பிரயாணப்பட்ட சில மணி நேரங்களில், அவர்கள் சிவந்த சமுத்திர ஓரமாய் வருகையில் பார்வோன் தங்களை பின்தொடர்வதை கண்டு பயந்தார்கள். **“பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.“ (யாத்திராகமம் 14:10).** இங்கு இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டாலும், **யாத்திராகமம் 14:11,12** வசனங்களில், **“அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்.“**. நேற்று வரை அவர்கள் எகிப்தில் இருந்தாலும், அவர்கள் உயிருக்கு பாதிப்பில்லாதிருந்தது, ஆனால் இப்பொழுது தங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தில், எகிப்தில் பார்வோனும் எகிப்தியரும் கண்டு அச்சப்படும் விதத்தில், பத்து வித வாதைகளை நடத்தி தங்களை அருமையாக புறப்பட பண்ணின கர்த்தரின் செயல்களை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து, மோசேயுடன் முறையிட்டனர்.

ஆனால் மோசேயோ கர்த்தரை பற்றிப் பிடித்துக் கொண்டவராக, **“அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை**

இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்." (யாத்திராகமம் 14:13,14). "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்." (யாத்திராகமம் 14:15,16), என்றார். "மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று." (யாத்திராகமம் 14:21). "இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்." (யாத்திராகமம் 14:29-31). இங்கு எகிப்தில் நடப்பித்த 10 வாதைகள் மட்டும் இல்லாமல், சிவந்த சமுத்திரத்தையே ஆண்டவர் பிளந்து மோசேயின் தலைமையில் அவர்களை நடத்தினார். இதனை கண்டு பிரமித்த இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயின்னிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். ஆம் கர்த்தருடைய வல்லமையை அவர்கள் பிரத்தியட்சமாய் கண்டார்கள். அதனால் அவருக்கு பயந்தார்கள். மேலும் மோசே கர்த்தருடைய ஊழியக்காரன் என்பதையும் உணர்ந்து, இந்த பிரயாணத்தில் நிச்சயமாய் கர்த்தர் தங்களை மோசேயின் தலைமையில் வழி நடத்துவார் என்பதை விசுவாசித்தனர், கர்த்தரை புகழ்ந்து பாடினர்.

ஆனால் அவர்கள் விசுவாசம், பாடல் எல்லாம் சில நாட்கள் கூட நீடிக்கவில்லை, "பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர்வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்றுநாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது."(யாத்திராகமம் 15:22,23). இங்கு மறுபடியும் அவர்களுக்கு தேவை ஏற்பட்டது. சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரையே பிளந்த தேவன், தங்கள் தாகத்துக்கு தண்ணீர் தர மாட்டாரா என்ற எண்ணம் கூட இல்லாமல், "அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்." (யாத்திராகமம் 15:24). இங்கு மறுபடியும் மோசே ஜனங்களின் முறுமுறுப்பிற்கு உள்ளானார். இங்கு அவர்கள் ஆண்டவரை நோக்கி முறையிடவில்லை, மோசேக்கு

விரோதமாய் தான் முறுமுறுத்தனர். ஒருவேளை மோசே ஜனங்களிடம், என்னிடம் ஏன் முறையிடுகிறீர்கள், ஆண்டவரிடம் கேளுங்கள் என்று கூறி இருக்கலாம், ஆனால் அவரோ அந்த முறுமுறுப்பை ஒரு பிள்ளை தன் தகப்பனிடம் கேட்பதை போல் எண்ணி, **"மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று." (யாத்திராகமம் 15:25).** இங்கு மறுபடியும் அற்புதமாய் தங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டு பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்னி ஸ்தம்பமும் தங்களை வழி நடத்தியும், சில மாத பிரயாணத்தில், **"இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்." (யாத்திராகமம் 16:1-3).** இங்கு மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் மோசையை சேர்த்து ஆரோனுக்கு விரோதமாகவும் முறுமுறுக்க தொடங்கினார்.

**"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன். ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணிவைக்கக்கடவர்கள் என்றார். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி: கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்; விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள். பின்னும் மோசே: சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் நீங்கள் திர்ப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கையில் இது விளங்கும்; கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்." (யாத்திராகமம் 16:4-8).** இவ்வாறாக மறுபடியும், மோசே இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்புகளை எதிர்கொண்டு, அதற்காக கோபப்படாமல், தன் தலைமை

நிலையில் இருந்து விலகாமல், கர்த்தரை நோக்கி பார்த்து, இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு தகப்பனாக இருந்து, அவர்களுக்கு வான மன்னாவை அற்புதமாய் பெற்று தந்தார். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும், அவர்கள் கர்த்தருடைய கிருபையை, போஷிப்பை, மன்னாவின் மூலமாய் காணும்படி செய்தார். மேலும் **“சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின்மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்.“ (யாத்திராகமம் 16:13-15)** என்றார். ஆம் அவர்களுக்கு தேவையான யாவையும் மோசே தேவனிடமிருந்து பெற்று தந்தார். தகப்பன் பிள்ளையை போஷித்து, பாதுகாத்து நடத்துவதை போல், அவர்களை வழிநடத்தினார். ஆனால் அவர்களோ மோசேயின் மனநிலையை புரிந்து கொள்ளவே இல்லை.

காரணம், **“பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள் என்றான்.“ (யாத்திராகமம் 17:1,2).** இங்கு மோசே ஜனங்களிடம் தேவனிடம் தண்ணீருக்காக கேட்பதை விட்டுவிட்டு, ஏன் இவ்வாறு வாதாடுகிறீர்கள் என்று கேட்டார். ஆனால் அவர்களோ, **“ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள்.“ (யாத்திராகமம் 17:3).** இங்கு ஜனங்கள் மோசேயின் மீது தங்கள் சூழ்நிலை நிமித்தம் குற்றம் சாட்ட நினைத்தார்களே தவிர, தேவனுக்கு கீழ்ப்படிந்து, இம்மட்டுமாய் நடத்தி வந்த தேவன், ஒவ்வொரு நாளும் போஷிக்கிற தேவன், தங்கள் தேவையை சந்திக்க மாட்டாரா என்ற உணர்வு இல்லாமல், மறுபடியும் வாதாடியும் முறுமுறுத்தும், தங்கள் இரட்சிப்பையே உதாசீனப்படுத்தி, தாங்கள் எகிப்திலேயே இருந்திருந்தால் நலமாய் இருக்கும் என்றனர். இது அவர்களின் உச்சகட்ட அறியாமையை, கீழ்ப்படியாமையை காண்பிக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், **“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச்**

**செய்தான்.“ (யாத்திராகமம் 17:5,6).** இங்கு மறுபடியும் மோசேயின் கையினால், கர்த்தர் ஒரு அற்புதத்தை செய்து, மோசேயை அவர்கள் தங்கள் தலைவனாகவும், தகப்பனாகவும் காணும்படி செய்தார். மேலும் **யாத்திராகமம் 17:8-13** வசனங்களில் **“அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம்பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.“**. இங்கு யோசுவா அமலேக்கியருடன் போரிட்டாலும், மோசையின் கரம் தேவனை நோக்கி இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பது விளங்குகிறது.

மேலும், **“பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு, அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்.“ (யாத்திராகமம் 17:14-16).** இங்கு மோசேயை, தொடர்ந்து ஆண்டவர் பல்வேறு விதங்களில் உபயோகிப்பதை காணலாம். எந்த கரங்களின் மூலம் ஆண்டவர் எகிப்தில் அற்புதங்களை செய்தாரோ, எந்த கரத்தை உபயோகித்து சிவந்த சமுத்திரத்தை பிறந்தாரோ, கன்மலையில் தண்ணீரை புறப்பட பண்ணினாரோ, அதே கரத்தை வைத்து நடக்கும் யாவையும் எழுதும்படியாக செய்தார். மேலும் மோசே பலிபீடத்தையும் தேவனுக்காக கட்டினார். இங்கு மோசே எவ்வாறு அயராது, இஸ்ரவேல் மக்களுக்காக காரியங்களை செய்தார் என்பதை காணலாம். ஆம், அந்த ஒரு மனிதனின் மீது தேவன் வைத்த நம்பிக்கையும், அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாய் மோசே நடந்து கொண்டதனாலும், இஸ்ரவேல் மக்களின் சகல காரியங்களும், அது ஆவிக்குரியதாக இருந்தாலும் சரீரத்திற்குரியதாக இருந்தாலும், மோசேயின் மூலமாகவே தேவன் நிறைவேற்றினார். அவர் எவ்வாறு தேவன் தன்னை நம்பி கொடுத்த எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு, தன்னையே அதற்கென அர்ப்பணித்து, சற்றும் சோர்ந்து போகாமல் உழைத்தார் என்பதை, பின்வரும் சம்பவத்தில் காணலாம்.

**"தேவன் மோசேக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும், கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும், மீதியானில் ஆசாரியனாயிருந்த மோசேயின் மாமனாகிய எத்திரோ கேள்விப்பட்டபோது, மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயினாலே திரும்பி அனுப்பிவிடப்பட்டிருந்த அவன் மனைவியாகிய சிப்போராளையும், அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு பிரயாணப்பட்டான். நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன் என்று மோசே சொல்லி, ஒரு மகனுக்குக் கெர்சோம் என்று பேரிட்டிருந்தான். என் பிதாவின் தேவன் எனக்குத் துணைநின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார் என்று சொல்லி, மற்றவனுக்கு எலியேசர் என்று பேரிட்டிருந்தான். மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயின் குமாரரோடும் அவன் மனைவியோடுங்கூட, அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்து: எத்திரோ என்னும் உம்முடைய மாமனாகிய நானும், உம்முடைய மனைவியும், அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு வந்திருக்கிறோம் என்று மோசேக்குச் சொல்லியனுப்பினான்." (யாத்திராகமம் 18:1-6).** இங்கு எவ்வாறு மோசே, தேவனுடைய பணியின் நிமித்தம் தன் சொந்த குடும்பத்தைக் கூட, தன் சுய வாழ்வை கூட தியாகம் செய்தார் என்பதை காணலாம். மேலும், **யாத்திராகமம் 18:13-16** வசனங்களில், **"மறுநாள் மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்கார்ந்தான்; ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் மோசேக்கு முன்பாக நின்றார்கள். ஜனங்களுக்கு அவன் செய்த யாவையும் மோசேயின் மாமன் கண்டு: நீர் ஜனங்களுக்குச் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும், ஜனங்கள் எல்லாரும் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் உமக்கு முன்பாக நிற்கவும் வேண்டியது என்ன என்றான். அப்பொழுது மோசே தன் மாமனை நோக்கி: தேவனிடத்தில் விசாரிக்கும்படி ஜனங்கள் என்னிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், என்னிடத்தில் வருகிறார்கள்; நான் அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்கிறேன் என்றான்.".** இங்கு பல்வேறு பொறுப்புகள் மத்தியிலும், தேவ சமூகத்தில் இஸ்ரவேல் மக்களுக்காக நிற்கிறது மட்டுமல்லாமல், காலமே தொடங்கி சாயங்காலம் மட்டும், அவர்களை நியாயம் விசாரிக்கிற நியாயதிபதியாகவும் மோசே இருந்தார். மோசே இவ்வளவாய் பிரயாசப்படுவது, இஸ்ரவேல் மக்களுக்கு புரியாவிட்டாலும், மோசேயின் மாமனுக்கு நன்றாக புரிந்தது. எனவே பாரமான இப்பணியை, எளிதாக்க வேண்டிய ஆலோசனைகளை கூறினார். மோசேயும் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அதே வேளையில் அவர் அமைதியாக உட்கார்ந்து விடவில்லை, தொடர்ந்து இஸ்ரேல் மக்களுக்காக ஓடினார். சீனாய் மலையில் ஆண்டவரோடு 40 நாட்கள் இரவும் பகலும் தரித்திருந்து, 10 கட்டளைகள் உள்பட தேவ நியாயப்பிரமாணத்தை பெற்று, அதனை ஜனங்களுக்கு கொடுத்தார். அவருடைய பணியை தொடர்ந்து நாம் அடுத்த பாகத்தில் தியானிப்போம். இவ்வாறாக மோசே, ஜனங்களுக்காக தன்னை அர்பணித்து, தேவ பணியை ஒரு தலைவனாக, தகப்பனாக இருந்து

செய்தது போல, நாமும் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை, பொறுப்புகளை அர்ப்பணிப்போடு செய்ய ஆண்டவர் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.



கர்த்தராகிய ஆண்டவர் மோசேயை எவ்வாறு அவர் பிறப்பிலிருந்து தெரிந்து கொண்டு, அவர் மூலமாய் தாம் செய்ய நினைத்ததை நிறைவேற்றினார் என்பதையும், மோசே தேவனுக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் மக்களை ஒரு நல்ல தலைவனாகவும் தகப்பனாகவும் இருந்து எவ்வாறு வழிநடத்தினார் என்பதையும் முதல் இரண்டு பாகங்களில் கண்டோம். தொடர்ந்து அவர் எவ்வாறு நியாயப்பிரமாணத்தையும், தேவனுடைய கற்பனைகளையும் தேவனிடத்தில் இருந்து பெற்று அதை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தார் என்பதையும், அவர் எவ்வாறு தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாய் செயல்பட்டார் என்பதையும் பின்வருமாறு தியானிப்போம். **“மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்.“ (யாத்திராகமம் 19:3-8)**. இங்கு மோசே கர்த்தர் தனக்கு கற்பித்த வார்த்தைகளை எல்லாம் இஸ்ரவேல்

மூப்பர்களுக்கு சொல்வதும், ஜனங்கள் கூறுவதை கர்த்தரிடத்தில் கூறுவதும், அவர் எவ்வாறு தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே ஒரு நல்ல பாலமாக செயல்பட்டார் என்பதை விவரிக்கிறது.

மேலும், **யாத்திராகமம் 19:9-13** வசனங்களில் **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தருக்குச் சொன்னான். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார். ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவேண்டும்; மிருகமானாலும்சரி, மனிதனானாலும்சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார்.**" இங்கு **நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்** என்பது மிகவும் அற்புதமான ஒன்றாகும். தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்த மோசேயை இஸ்ரவேல் மக்கள் விசுவாசிக்கும்படியாய், மோசே எவ்வளவு பெரிய தேவனோடு சஞ்சரிக்கிறார் என்பதை விளங்க காட்ட தேவன் தாமே இறங்கி வந்தார். மேலும், **யாத்திராகமம் 19:16-19** வசனங்களில் **"மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள். கர்த்தர் சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது. எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்.**". இங்கு தேவனுடைய பிரசன்னம், அவருடைய மகிமை, எவ்வளவு பெரியது என்பதையும், சாதாரண மனிதனால் அதை சற்றும் தாங்கிக் கொள்ள முடியாது என்பதையும், ஆனால் அதே நேரத்தில் அதே மகிமையின் மத்தியில் நின்று, **மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்** என்பது மோசேயுவுக்கும் மற்ற அனைவருக்கும் உள்ள வித்தியாசத்தை காண்பிக்கிறது.

மேலும் **யாத்திராகமம் 19:20-22** வசனங்களில் **“கர்த்தர் சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்து போகாதபடிக்கும், நீ இறங்கிப்போய், அவர்களை உறுதியாக எச்சரி. கர்த்தரின் சமுகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.“**, இங்கு, மோசேயுவுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படையாக தெரிகிறது. கர்த்தர் சீனாய் மலையின் கொடுமுடியில் இறங்கினார். மோசே கொடுமுடிக்கு ஏறிப்போனார். இங்கு மோசே முழுவதுமாய் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள், மகிமைக்குள் இருக்கிறார். ஆனால் மற்றவர்களோ அதை தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு கூட பயந்தார்கள். அதற்காக தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர். ஆனால் மோசேயோ அப்படியல்ல. மேலும் **யாத்திராகமம் 19:23-25** வசனங்களில் **“அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள் என்று தேவரீர் எங்களை உறுதியாக எச்சரித்திருக்கிறீர்; ஆகையால், ஜனங்கள் சீனாய்மலையின்மேல் ஏறிவரமாட்டார்கள் என்றான். கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள் என்றார். அப்படியே மோசே இறங்கி ஜனங்களிடத்தில் போய், அதை அவர்களுக்குச் சொன்னான்.“**.

இங்கு ஒரு பக்கம் மோசே கர்த்தருடைய மகிமையில் இருந்தாலும், மறுமுனையில் அவர் இஸ்ரேல் மக்களோடு தொடர்பிலிருந்து, அவர்கள் கர்த்தருடைய வார்த்தையின்படி செய்வார்கள் என்பதை, ஜனங்கள் சீனாய் மலையின் மேல் ஏறி வர மாட்டார்கள் என்று அவர் உறுதியாய் கூறுவதில் இருந்து காணலாம். இங்கு, அவர் இரண்டு விதமான சூழ்நிலையிலும், (ஒன்று தேவனோடு மகிமையில் சீனாய் மலையின் கொடுமுடியில், மற்றொன்று மலை அடிவாரத்தில் ஜனங்களோடு) மாறி மாறி இருந்து, ஒரு பக்கம் தேவனுக்கு நல்ல ஊழியக்காரனாய், மறுபக்கம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நல்ல தலைவனாய் இருந்து வழிநடத்தினார். அதே நேரத்தில் அவர்களுக்கு நல்ல தகப்பனாகவும் இருந்து அவர்கள் தேவைகள் யாவும் சந்தித்து அவர்களுக்கு தேவன் அருளிய சகல நன்மைகளையும் பெற்று தந்தார்.

**யாத்திராகமம் 31:18** கூறுகிறது, **“சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.“**. இங்கு இவ்வாறு 40 நாட்கள் தேவ மகிமையிலேயே சஞ்சரித்து, தேவனுடைய விரலினாலேயே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் பலகைகளை பெற்றுக் கொண்டவராக, அதை ஜனங்களிடம் சேர்க்க மலையில் இருந்து இறங்கினார். ஆனால் **“மோசே மலையிலிருந்து**

இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள். அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்." (யாத்திராகமம் 32:1-6). இங்கு இஸ்ரேல் மக்களுக்காக 40 நாட்கள் தேவனிடத்தில் சஞ்சரித்து, கற்பனைகளை தன் கைகளில் ஏந்தி வரும் மோசே ஒரு புறம், தேவனுடைய மகிமையையும், வல்லமையையும் கண்ணாரக் கண்டும், எச்சரிக்கப்பட்டும், அத்தேவனுடைய மகிமையை கன்று குட்டிக்கு ஒப்பாக்கி, அதற்கு பலிபீடம் கட்டி, பலி செலுத்திய பொல்லாத இஸ்ரவேல் மக்கள் மறுபுறம். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்" (யாத்திராகமம் 32:7) என்றார்.

இங்கு ஆண்டவரே தனக்கு கீழ்ப்படிந்த மோசே ஒருவன் போதும், அவனை வைத்தே தன் சித்தத்தை நிறைவேற்ற கர்த்தர் இவ்வாறு கூறிய பொழுதும், "மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன? மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும்பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும். உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான்." (யாத்திராகமம் 32:11-13). இந்த மூன்று

வசனங்களில் மோசேயின் தகப்பனின் குணம் வெளிப்படுகிறது. ஆம் முதலாவது அவர், தேவன் எவ்வாறு வல்லமையாய் அவர்களை புறப்பட பண்ணினார் என்பதையும், அவர் தண்டிப்பதன் மூலம், அது எகிப்தியர் தேவனுடைய இரட்சிப்பையே, அவருடைய மீட்பையே குறை கூறுவதற்கு ஏதுவாகும் என்பதையும், அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களையும் தேவனுக்கு நினைபூட்டினார். இங்கு அவர்கள் மேல் பரிதாபங்கொள்ளும் என்று கெஞ்சி பிரார்த்தித்தது, அவருடைய தகப்பனுடைய மனதை வெளிப்படுத்துகிறது. ஆம் இஸ்ரவேல் மக்களின் பொல்லாத செய்கைகளும், அவர்களுடைய அவிசுவாசமும், பொறுமையற்ற முறுமுறுப்புகளும், செயல்களும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு கன்று குட்டியாகிய சொரூபத்தை உண்டு பண்ணி அதற்கு பலியிட்டு பணிந்ததை, ஆண்டவரே பொறுத்துக் கொள்ள முடியாமல், அவர்களை அழிக்க நினைத்தார். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், சகலத்தையும் தாங்கிக் கொண்டு, அவர்களுக்கு பரிந்து பேசுவது உலகப் பிரகாரமான ஒரு தகப்பனுடைய இருதயத்திலும் மேலானதாகும்.

**யாத்திராகமம் 32:14** கூறுகிறது **“அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்.“** என்று. **“பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது.“ (யாத்திராகமம் 32:15,16)**. இங்கு, தன் கையில் தேவன் தாமே எழுதிக் கொடுத்த கட்டளையை 40 நாட்கள் காத்திருந்து பெற்றுக் கொண்ட மோசே அதை கையில் ஏந்தியவராய், அதற்கு நேர் எதிர் மாறாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரவேல் மக்களிடத்திற்கு இறங்கிப் போனார். **“ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு, மோசேயை நோக்கி: பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்றான். அதற்கு மோசே: அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது என்றான்.“ (யாத்திராகமம் 32:17,18)**. இங்கு மோசேக்கும், மக்களுக்கும் இடையே அமர்ந்திருந்து, மோசே மலையிலிருந்து இறங்கி வர பொறுமையாக காத்திருந்த யோசுவாவிற்கு மலையின் அடிவாரத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. காரணம், அவர் மற்ற மக்களோடு இல்லை. அவர் தேவனோடு இருக்கும் மோசேயின் ஐக்கியத்தையே பெரியதாக எண்ணி அவருக்காகவே காத்திருந்தார். இதனாலேயே அவர் அடுத்த தலைமுறை தலைவரானார்.

**“அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.“**

**(யாத்திராகமம் 32:19,20).** இங்கு நடந்ததை தன் கண்ணால் பார்த்த மோசே கோபமூண்டவராகி, எதற்காக 40 நாட்கள் மலையில் காத்திருந்தாரோ, தேவனுடைய கரத்தினால் செய்யப்பட்டு, அவராலே எழுதப்பட்ட அந்த பலகைகளை உடைத்துப் போட்டார். மேலும் பொன் கன்றுக்குட்டியை அக்கினியால் சுட்டெரித்து, அதை பொடியாக்கி அந்த பொடியை தண்ணீரில் கலந்து ஜனங்கள் குடிக்கும்படி செய்தார். இங்கு ஆண்டவர் எதற்காக அவ்வளவு கோபப்பட்டார் என்பது மோசேக்கு புரிந்திருக்கும். ஆனால் அதே நேரத்தில், அவர் தேவனிடத்தில் கெஞ்சி பிரார்த்திக்காதிருந்தால், அவர்களுடைய நிலைமை பரிதாபமாகப் போயிருக்கும். இங்கு ஒரு நல்ல தகப்பனாக இருந்து அவர்களை அழிவிலிருந்து விலகிக் காத்தார். ஆனால் அதே வேளையில், அருமையான கற்பலகைகளை, அவர் தமது கோபத்தினால் இழந்து போனார்.

**“பின்பு, மோசே ஆரோனை நோக்கி: நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள் என்றான். அதற்கு ஆரோன்: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர். இவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும்; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள். அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது என்றான்.“ (யாத்திராகமம் 32:21-24).** மேலும் **“ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான். அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே கண்டு, பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்.“ (யாத்திராகமம் 32:25,26).** இங்கு மோசேக்கு அவர்களுடைய மோசமான நிலையை கண்ட பொழுது, அவர்களில் சர்வ சங்காரம் உண்டாகாதபடிக்கு, தண்டனை பெற வேண்டியவர்களை தண்டிக்க செயல்பட்டார். இங்கு வெறும் அன்பை, பரிவை மட்டும் வெளிப்படுத்தாமல், திருத்த வேண்டியவற்றை திருத்தவும், அவர் ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக இருந்து செயல்பட்டார். **“அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன் தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன் தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன் தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்.“ (யாத்திராகமம் 32:27,28).**

இப்படிப்பட்ட ஒரு பெரிய சங்காரத்திற்கு பிறகு, **“மறுநாளில் மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்றான்.“ (யாத்திராகமம் 32:30)**. இங்கு இஸ்ரவேல் மக்களின் பொல்லாப்பினால் மேலும் வாதை உண்டாகாதபடிக்கு மறுபடியும் ஆண்டவரிடத்தில் பரிந்து பேச சென்றார். 40 நாட்கள் ஆண்டவரோடு சஞ்சரித்து பெற்ற கற்பனைகளை மக்களுக்கு சொல்லி, அவர்களை கர்த்தருக்கு கீழ் படிந்து நடக்க செய்ய நினைத்த மோசேயின் எதிர்பார்ப்பு வேதனையில் முடிந்தது. ஆனாலும் மோசே சோர்ந்து போகவில்லை. உடனடியாக மறுபடியும் மலையின் மேல் செல்கிறார். இது எவ்வாறு அவர் மக்களை நேசித்தார் என்பதை விளக்குகிறது. **“அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.“ (யாத்திராகமம் 32:31,32)**. இங்கு மறுபடியும் இஸ்ரேல் மக்கள் செய்த தவறுக்கான தண்டனையை தான் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருந்தார். தன்னுடைய பெயர் ஜீவ புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டு போனாலும் பரவாயில்லை, ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கு ஆண்டவர் மன்னித்தருள வேண்டும் என்று கெஞ்சினார். இங்கு மறுபடியும், மறுபடியும் அவர் ஒரு நல்ல தலைவனுக்கும் மேலாய், நல்ல தகப்பனைப் போல தன் ஜீவனையே தன் மக்களுக்காக கொடுக்க துணிந்தார். **“மோசே கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்டு, அதற்கு ஆசரிப்புக் கூடாரம் என்று பேரிட்டான். கர்த்தரைத் தேடும் யாவரும் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போவார்கள். மோசே கூடாரத்துக்குப் போகும்போது, ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்றுகொண்டு, அவன் கூடாரத்துக்குள் பிரவேசிக்குமட்டும், அவன் பின்னே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடாரவாசலில் நின்றது; கர்த்தர் மோசேயோடே பேசினார். ஜனங்கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கக்கண்டார்கள்; ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள்தங்கள் கூடாரவாசலில் பணிந்துகொண்டார்கள்.“ (யாத்திராகமம் 33:7-10)**. இங்கு எவ்வாறு மோசே ஒரு ஆவிக்குரிய தகப்பனாய், தலைவனாய் இருக்கிறார் என்பதை காணலாம்.

மேலும், **யாத்திராகமம் 33:11** கூறுகிறது **“ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்; பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான்; நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்.“**. மேலும், இது எவருக்கும் கிடைக்காத பாக்கியம் ஆகும். ஆண்டவருக்கு முன் மோசே ஒன்றுமில்லாத, அழிவுள்ள மாம்ச மனிதன். ஆனால் ஆண்டவரோ தம் சித்தம், எண்ணம், விருப்பம் யாவையும் மோசேயோடு பகிர்ந்து கொண்டார். ஆதாம் ஏவாளை

இப்படிப்பட்ட ஒரு உறவுக்குள்ளாகவே தேவன் வைத்திருக்க நினைத்தார். ஆனால் அவர்களோ அதற்கு கீழ்படியவில்லை. ஆனால் மோசே ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார். அவருடைய இருதயத்தின் வாஞ்சையை புரிந்து கொண்டார். இதனால் தேவன் அவரை தமது சிநேகிதன் என்றார். இப்படிப்பட்ட மோசே, தனக்கு அடுத்ததாக நூனின் குமாரனாகிய யோசுவாவையும் இவ்வாறாக ஆயத்தப்படுத்துவதை காணலாம். ஒருபுறம் லட்சகணக்கான மக்கள் எத்தனையோ அற்புதங்களை, நன்மைகளை பெற்றிருந்தும் நன்றிகெட்டவர்களாய், கன்றுக்குட்டியை தொழுது கொண்ட பொழுதும், ஆண்டவருக்காக தனி மனிதனாய் மோசே நிற்கிறார். இன்றும் ஆண்டவர் இப்படிப்பட்ட மக்கள் மூலமாகவே இவ்வுலகத்தில் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

இவ்வாறு மோசேயை ஒரு சிநேகிதன் போல் என ஆண்டவரே கூறுவதற்கான காரணங்களை பின்வரும் சம்பவத்தில் காணலாம். **யாத்திராகமம் 33:12,13** வசனங்களில் **“மோசே கர்த்தரை நோக்கி: தேவரீர் இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ என்று சொன்னீர்; ஆகிலும், என்னோடேகூட இன்னாரை அனுப்புவேன் என்பதை எனக்கு நீர் அறிவிக்கவில்லை; என்றாலும், உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றும், என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்றும், தேவரீர் சொன்னதுண்டே; உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான்.“**. இங்கு ஆண்டவரே சிநேகிதன் என்று சாட்சி கொடுத்த பின்னரும், இன்னும் நான் உம்மை பற்றி அறிய வேண்டும், உம்முடைய கிருபையை இன்னும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையை காணும்பொழுது, அவர் தேவ சமூகத்தை, உறவை, ஐக்கியத்தை எவ்வளவு மேன்மையாக எண்ணினார் என்பதை காணலாம். ஆண்டவரும் அவர் வேண்டுதலை கேட்டு, **“அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.“ (யாத்திராகமம் 33:14)**.

மேலும் **யாத்திராகமம் 33:15,16** வசனங்களில் **“அப்பொழுது அவன் அவரை நோக்கி: உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்.“**. இங்கு மோசே ஆண்டவரை ஒரு சிநேகிதன் தன்னோடு வர அழைப்பது போலவே அழைக்கிறார். அதற்கு ஆண்டவர், **“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்.“ (யாத்திராகமம் 33:17)**. இங்கு ஆண்டவருடைய கண்களில் மோசேக்கு கிருபை கிடைத்ததும், ஆண்டவர் மோசேயை பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்று

கூறுவதும், ஆண்டவர் மோசேயை ஆதியிலேயே, தம் திட்டத்திற்கென தெரிந்து கொண்டார் என்பதை தெளிவாக கூறுகிறது. மேற்கண்ட அனுபவத்திற்கெல்லாம் உச்சக்கட்டமாக, **"அப்பொழுது அவன்: உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான். அதற்கு அவர்: என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்று சொல்லி, நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்றார். பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்; பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்." (யாத்திராகமம் 33:18-23).**

மேற்கண்ட இப்படிப்பட்ட அனுபவத்தை, ஆண்டவர் மாம்சமான மனிதன் ஒருவனுக்கும் கொடுக்கவில்லை. ஆனால் ஆண்டவர் மோசேயின் மீது வைத்த கிருபையும், தயவும், அன்பும் அதற்கு பாத்திரமாய் மோசே வாழ்ந்ததும், இம்மாம்ச சரித்திரத்தில் இருந்து கொண்டே மகிமையான அனுபவங்களை பெற முடிந்தது. ஆனால் நாளொன்று வந்தது, இங்கு அவர் கேட்ட வார்த்தை மாம்சமாகி, மறுரூப மலையில் மகிமையால் நிறைந்திருந்த பொழுது, அங்கும் மோசே காணப்பட்டார். நாம்தான் மோசேயை பழைய ஏற்பாட்டு ஐந்து ஆகமங்களோடு முடிந்துவிட்டார் என்று நினைக்கிறோம். ஆனால் ஆண்டவரோ, தாம் செய்ய வேண்டிய பணியை பற்றி மோசேயோடு, புதிய ஏற்பாட்டிலும் உரையாடிக் கொண்டிருக்கிறார். மேலும் கடைசி காலத்தில் வரப்போகிற இரண்டு சாட்சிகளில் ஒருவராகவும், மோசே இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. தேவனே யாவற்றையும் அறிவார். இப்படிப்பட்ட மகிமையான ஒரு வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழவே ஆண்டவர் எதிர்பார்க்கிறார். நாமும் இவ்வுலகில் நம் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம்மை சூழ்ந்து இருப்போர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும், நாம் தேவ ஐக்கியத்தை, உறவை மாத்திரம் நடுவோமானால், எப்பேர்ப்பட்ட சூழ்நிலை நடுவிலும், தேவ வழி நடத்துதலையும், தேவ பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று, எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியாக, பரம கானானையும் சென்றடைவோம். அப்படிப்பட்ட மேன்மையான அனுபவங்களின் ஊடாக ஆண்டவர் தாமே நம்மை நடத்துவராக. மோசேயை குறித்து மேலும் பின்வரும் பாகங்களில் தியானிப்போம். ஆண்டவருடைய மாறாத கிருபை, தயவு, பிரசன்னம் நம்மோடு இருப்பதாக. ஆமென், அல்லேலுயா.

# தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 4



ஆண்டவர் மோசேயை எவ்வாறு தெரிந்துகொண்டு, அவர் மூலமாய் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து விடுவித்து, அற்புத விதமாய் நடத்தி வந்தார் என்பதையும், எவ்வாறு மோசே 40 நாட்கள் இரவும் பகலும் சீனாய் மலையில் ஆண்டவரோடு இருந்து, 10 கற்பனைகள் உட்பட நியாயப்பிரமாணம் அனைத்தையும் இஸ்ரவேல் மக்களுக்கு பெற்று தந்தார் என்பதையும், இவற்றில் ஒவ்வொரு நிகழ்வில் பொழுதும், மோசே எவ்வாறு இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக இருந்து செயல்பட்டார் என்பதையும், கடந்த மூன்று பாகங்களிலும் கண்டோம். தொடர்ந்து எவ்வாறு மோசேயை கொண்டு ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார் என்பதை இந்த நாலாம் பாகத்திலும் காண்போம். மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தி செல்கையில், பலவித இன்னல்கள் ஏற்பட்ட பொழுதும், பலமுறை இஸ்ரவேல் மக்கள் ஆண்டவருக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்தபொழுதும், பொன் கன்றுக்குட்டி சிலையை செய்து அதை வணங்கியது போன்ற பொல்லாத செயல்களில் ஈடுபட்ட பொழுதும், அதினிமித்தம் ஆண்டவரால் தண்டிக்கப்பட்ட பொழுதும், மோசே மாத்திரம் தொடர்ந்து இஸ்ரவேல் மக்களுக்கும், ஆண்டவருக்கும் இடையே பாலமாக இருந்து, இஸ்ரேல் மக்கள் அழிந்து போகாதபடி அவர்களை காத்து, அவர்களுக்காக ஒரு நல்ல தலைவனாக மட்டுமல்ல, ஒரு நல்ல தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார். இதனை மேலும் உறுதிப்படும் விதமாக கீழ்க்காணும் வசனங்கள் உள்ளன. **“ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக்**

**கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்; இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள்; நீரோ, எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும் என்றான். அதற்கு அவர்: இதோ, நான் ஒரு உடன்படிக்கைபண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.“ (யாத்திராகம் 34:9,10)**. **உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்** என்று ஆண்டவரே கூறுவதிலிருந்து, எவ்வளவு வல்லமையாக ஆண்டவர் மோசேயை இஸ்ரவேல் மக்களிடத்தில் பயன்படுத்த விரும்புகிறார் என்பதை காணலாம். காரணம், மோசே தன்னை பற்றி எண்ணாமல் கர்த்தருடைய கிருபை, இஸ்ரவேல் சபை நடுவில் எழுந்தருள வேண்டும் என்றும், அவர்கள் பாவங்கள் அக்கிரமங்களை எல்லாம் ஆண்டவர் மன்னித்தருள வேண்டும் என்றும் வேண்டுவதிலிருந்து, அவருடைய தகப்பனுடைய மனதுள்ளம் வெளிப்படுகிறது.

மேலும் **யாத்திராகமம் 34:29** இல் **“மோசே சாட்சிப் பலகைகள் இரண்டையும் தன் கையில் எடுத்துக்கொண்டு, சீனாய்மலையிலிருந்து இறங்குகிறபோது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான்.“**. இங்கு மறுபடியும் சீனாய் மலைக்குச் சென்று பத்து கற்பனைகளை பெற்று திரும்புகையில், அவர் தொடர்ந்து தேவ சமூகத்திலேயே இருந்த காரணத்தினால், அவருடைய முகம் பிரகாசித்தது. இது ஒரு மேன்மையான அனுபவமாகும். தேவனுடைய வல்லமை, மகிமை மோசேயின் மாம்ச முகத்தில் பிரதிபலிப்பது, அவர் எவ்வளவு நெருக்கமாய் தேவனோடு இருந்தார் என்பதை விளக்குகிறது. அதை அவரே உணராதது, அவர் மலையில் இருந்து இறங்கி வந்த பின்பும் தன் மாம்ச சரித்திரத்தில் எவ்வித மாறுதலையும் காணாததே ஆகும். அவர் மாம்ச சரீரத்தில் இருந்தாலும் அவருக்கு தெரியாமலேயே, அவருடைய சரீரம் மறுரூபம் அடைய ஆரம்பித்தது. இதனால் தான் மோசேயின் மரித்த சடலத்தை கூட ஆண்டவரே எடுத்துக் கொண்டார்.

**லேவியராகமம் 10:1-3** வசனங்களில் **“பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.“**, இங்கு ஆரோனின் பிள்ளைகளான நாதாபும், அபியூவும் ஆசாரியப்பட்டத்துக்கு தெரிந்து கொள்ளபட்டவர்களாக இருந்தும், கர்த்தருக்கேற்ற பரிசுத்தம் இல்லாவிட்டால் மரணம் உடனே வரும்

என்பதை காணலாம். மோசேயும், இங்கு தன் சகோதரனின் குமாரர்களை காட்டிலும், கர்த்தருடைய பரிசுத்தமே முக்கியம் என்பதை அவர் கூறும் வார்த்தைகளில் இருந்து காணலாம். அவருடைய முகம் பிரகாசம் அடையும் விதமாக அவர் வாழ்ந்ததற்கு காரணம், அவர் கர்த்தருடைய சமூகத்தில் பரிசுத்தமாய் காணப்படுவதை மிக ஜாக்கிரதையாக எண்ணினார் என்பதே.

**எண்ணாகமம் 11:1-3** வசனங்களில், **"பின்பு, ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது, அவருடைய கோபம் மூண்டது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கிக் கூப்பிட்டார்கள்; மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; உடனே அக்கினி அவிந்துபோயிற்று. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்ததினால், அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான்."**. இங்கு மறுபடியும் மறுபடியும் அவர்கள் முறுமுறுப்பதையும், முறையிடுவதையும் காணலாம். ஆனால் தொடர்ந்து மோசே, ஒரு நல்ல தகப்பனாக அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசி அவர்கள் அழியாதபடி காத்தார். **"பின்பு அவர்களுக்குள் இருந்த பலஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப்போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது. இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும். அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்; கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருந்தது. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன? இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ? இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு**

**இறைச்சி கொடு என்று என்னைப் பார்த்து அழுகிறார்களே. இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக்கொண்டான்." (எண்ணாகமம் 11:4-15).**

இங்கு மறுபடியும் இஸ்ரேல் மக்கள் இறைச்சிக்காக முறையிட்டனர். அவர்கள் இறைச்சிக்காக அழுதது மாத்திரமின்றி, தாங்கள் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த எகிப்திலேயே தாங்கள் சுகமாய் வாழ்ந்ததாகவும், சுவையாய் உண்டதாகவும் அவர்கள் கூறுவது அவர்களின் அறியாமையை காண்பிக்கிறது. மேலும் ஒவ்வொரு நாளும் கிருபையாய் தேவன் அருளிய மன்னாவையும் அவர்கள் குறை கூறியது, தேவனுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. மோசேக்கும் அது பொல்லாப்பாயிருந்தது. இங்கு மறுபடியும் மோசே ஒரு தகப்பன் பிள்ளைகளுக்காக மன்றாடுவது போல் மன்றாடுகிறார். ஆனால் அதே நேரத்தில், தான் அதை தாங்க கூடாத பாரமாகவும் உணர்கிறார். உடனே ஆண்டவர் **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன்மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்." (எண்ணாகமம் 11:16,17)** என்றார். இங்கு இஸ்ரவேல் மக்களின் பொல்லாப்பைக் கண்டு ஆண்டவர் கோபப்பட்டாலும், மோசேயின் ஜெபம் அதை மறக்க செய்து, அவர் மக்களை தொடர்ந்து வழி நடத்தும் படியாய், மோசேயின் பாரத்தை குறைப்பது பற்றி, தேவனை செயல்பட வைத்தது.

மேலும், **"நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம்பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார். நீங்கள் ஒருநாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபதுநாள் மாத்திரமல்ல, ஒரு மாதம்வரைக்கும் புசிப்பீர்கள்; அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்குத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பீர்கள்; உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்." (எண்ணாகமம் 11:18-20)**. இங்கு ஒரு பக்கம் ஆண்டவர் இஸ்ரவேல் மக்கள் கேட்டதை அளவில்லாமல் கொடுத்ததை போல் இருந்தாலும், உண்மையில் அவர்கள் இச்சித்ததை, அவர்கள் வெறுத்துப் போகும்படியாய், தம்முடைய வல்லமையை அவர்கள் காணும்படியாய், இப்படிப்பட்ட மாம்ச இச்சைக்கேற்ற முறுமுறுப்பு அழிவையே கொண்டுவரும் என்பதை,

அவர்கள் உணர்வதற்காக இவ்வாறு செய்தார். **“அதற்கு மோசே: என்னோடிருக்கிற காலாட்கள் ஆறுலட்சம்பேர்; ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே. ஆடுமாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் அவர்களுக்காகச் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா என்றான்.“ (எண்ணாகமம் 11:21,22)**. மோசேக்கு கூட ஆண்டவர் எவ்வாறு இத்தனை பேருக்கு ஒரே நேரத்தில் இறைச்சி தருவார் என்பது சந்தேகமாய் இருந்தது. ஆனால் ஆண்டவரோ, **“அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்.“ (எண்ணாகமம் 11:23)**. மேலும், **“அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள். அப்பொழுது இரண்டுபேர் பாளயத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத், மற்றவன்பேர் மேதாத்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான். உடனே மோசேயினிடத்திலுள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனுமாகிய யோசுவா பிரதியுத்தரமாக: என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான். அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்.“(எண்ணாகமம் 11:24-29)**. இங்கு ஆண்டவர் மோசேயின் மீது அக்கறை கொண்டு, அவர் மேல் இருக்கும் ஆவியை மற்றவருக்கு பகிர்ந்து கொடுப்பதும், அதே நேரத்தில் மோசேயோ, தன் மேல் உள்ள ஆவியும், தேவ பிரசன்னமும், தனக்கு மட்டுமல்ல தன் மக்கள் அனைவருக்கும் கிடைத்தால் நலமாய் இருக்குமே என்று அவர் கூறுவதும், இறைச்சிக்காக இச்சையோடும் முறுமுறுத்த மக்களின் மீது மோசே கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறது.

**எண்ணாகமம் 11:30-34** வசனங்களில் **“பின்பு, மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டுவந்து, பாளயத்திலும் பாளயத்தைச் சுற்றிலும், இந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும் அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும், தரையின்மேல் இரண்டுமுழ உயரம் விழுந்துகிடக்கச் செய்தது. அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச்**

**சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைத்தார்கள். தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார். இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்.**". இங்கு ஆண்டவர் அற்புத விதமாய் இஸ்ரவேல் மக்கள் இச்சித்தது போல், அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு காடைகளை கொடுத்தாலும், அதை அவர்கள் விருப்பத்தோடு பெற்று, சமைத்து உண்டாலும், அவர்கள் சாப்பிடுகிற வேலையில் தானே கர்த்தருடைய கோபம் எழும்பி ஜனங்களை வாதித்தது. ஆம், ஒருவேளை அவர்கள் விரும்பினதை, அவர்கள் அழுது, முறுமுறுத்து என எப்படியோ பெற்றுக்கொண்டனர். ஆனால் அது அவர்களுக்கு ஆசீர்வாதத்தை அல்ல அழிவைத்தான் கொண்டு வந்தது. ஆம் ஆண்டவருடைய சித்தத்தை, திட்டத்தை அறியாமல், அல்லது அறிந்தும் அவ்வாறு வாழ விரும்பாமல், தங்கள் சுய சித்தத்தின்படியும், இச்சையின்படியும் வாழ வேண்டும் என நினைப்பவர்கள், ஆசிர்வாதம் என சிலவற்றை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டாலும் அது அவர்களுக்கு அழிவையே கொண்டு வரும்.

**எண்ணாகமம்** 12:1-3 வசனங்களில், "**எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.**". இங்கு மோசேக்கு அவருடைய சொந்த சகோதர, சகோதரி மூலமாகவே எதிர்ப்பு வந்தது. மோசே பிறந்த பொழுது இந்த மிரியாம் மூலமாகவே ஆண்டவர் அவரைக் காத்தார். மிரியாம் மூலமாகத்தான் மோசேக்கு பார்வோனின் அரண்மனையில் வளரும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் ஆரோனையும் ஆண்டவரே மோசேக்கு உதவியாக தந்தார். ஆசாரியப்பட்டத்தையும் ஆரோனுக்கே கொடுத்தார். ஆண்டவர் எதற்காக மோசேயை தெரிந்து கொண்டார், மோசேயோடு இணைந்து செயல்பட ஆண்டவர் தங்களுக்கு என்னென்ன பணிகளை கொடுத்துள்ளார் என்பதை நன்றாக அறிந்த இவ்விருவரும், மோசேக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய இவ்விருவரும், மோசேக்கு விரோதமாக, அவர் ஒரு எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தனிமித்தம், அவர் மனைவியை காரணம் காட்டி, அவர் ஏதோ தேவனுக்கு எதிராய் இப்படி திருமணம் செய்தது போல், எனவே தாங்கள்தான் உண்மையாக ஆண்டவருக்கு ஊழியம் செய்வது போல், இவ்விருவரும் **எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ** என்று கூறுவது, மற்ற இஸ்ரவேல் மக்களைப் போல அவர்களும் மோசேயை பார்க்க நினைத்ததும், மோசேயை காட்டிலும் தங்களை உயர்த்த நினைத்ததும் வெளிப்படுகிறது. ஆனால் உண்மையில் மோசே எப்படிப்பட்டவர் என்பதை அவர்கள் மறந்து போயிருந்தனர். மோசேயை ஆண்டவர் சினேகிதன் என்றார். அவர் மூலமாகவே அற்புதங்களை செய்தார்.

அவரிடமே பத்து கற்பனைகளையும், நியாயப்பிரமாணத்தையும், ஆசிரிப்பு கூடார வேலையும் கொடுத்தார். வான மன்னாவை பொழிந்தருள பண்ணினார். தேவ சமூகத்திலேயே இருந்த அவருடைய முகம், தேவனுடைய மகிமையை பிரகாசிப்பித்தது. இவற்றில் ஒன்றையும் பெறாத இவர்கள், ஏதோ குடும்ப பிரச்சினை காரணமாக, எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயான மோசேயின் மனைவியை மட்டம் தட்ட நினைத்து, மோசேக்கு விரோதமாகவே அவர்கள் பேசினர். வசனம் 12:2 அருமையாக கூறுகிறது, **கர்த்தர் அதைக் கேட்டார்** என்று.

ஆம் ஆரோனும் மிரியாமும் இஸ்ரவேல் மக்கள் முன் மோசேயை, அவர் விவாகம் பண்ணின எத்தியோப்பிய ஸ்திரீயினிமித்தம் குற்றப்படுத்த நினைத்தனர். ஆனால் அது மக்களிடம் போய் சென்றதோ இல்லையோ, உடனடியாக தேவ சமூகத்தை எட்டினது. வசனம் 12:3 கூறுகிறது, **மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்** என்று. ஆம் ஒரு காலத்தில் கோபத்தால் ஒரு மனிதனைக் கொன்று போட்ட மோசே, இப்பொழுது முற்றிலும் தன்னை தேவப்பணிக்கென அர்பணித்தவராய், சகல மனிதரிலும் மிகுந்த சாந்தம் உள்ளவராய் இருந்தார். ஆம் இஸ்ரவேல் மக்கள் முறுமுறுத்த போது கோபப்படாமல், அவர்களுக்காக பரிந்து பேசிய மோசே, தன் சொந்த சகோதர, சகோதரிக்கு விரோதமாக ஒன்று பேசாமல் அமைதியாக இருந்தார். ஆனால் ஆண்டவர் அவருக்காக வழக்காட உடனே இறங்கினார். **எண்ணாகமம்** 12:4-9 வசனங்களில், **“சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள். கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள். அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.“.**

இங்கு மோசேயை இஸ்ரவேல் ஜனங்கள் முன் வெட்கப்பட வைக்க வேண்டும், சிறுமைப்பட வைக்க வேண்டும் என்று ஆரோனும் மிரியாமும் நினைத்தனர். ஆனால் அவர்கள் பேசிய பேச்சு, பரலோக தேவனையே இறங்கி வர செய்து, மோசேக்கு ஆதரவாய் பேச வைத்தது. ஆம் இங்கு ஆண்டவர் மாத்திரமே மோசேயின் இருதயத்தை நன்றாக அறிந்திருந்தார். தான் கொடுத்த பணிக்காக மோசே எவ்வளவு தியாகம் செய்தார், எவ்வளவு கடினமான சூழ்நிலையை கடந்து வந்தார், தன்னைப் பற்றியோ தன் குடும்பத்தை பற்றியோ கவலைப்படாமல், இஸ்ரவேல் மக்களுக்காகவே

அவர் வாழ்ந்தார் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனவே மோசேக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஆண்டவரே கூறினார். மோசேயை தன் தாசன் என்றார். என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன் என்றார். மேலும் அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான் என்று கூறி, மோசேயின் மேலான ஆவிக்குரிய வாழ்வு குறித்து ஆண்டவரே சாட்சி கொடுத்து, இப்படிப்பட்ட மோசேக்கு விரோதமாய் பேச உங்களுக்கு பயமில்லாமல் போனது என்ன என்றார். இதைக் கேட்ட மோசேக்கு வேறு எதுவும் தேவையில்லை. ஆண்டவருக்கு உண்மையாய் வாழ்ந்த மோசேக்காக ஆண்டவரே வாதாடினார். வாதாடினது மட்டுமல்ல, **"மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்." (எண்ணாகமம் 12:10)**. ஆம், மிரியாமும், ஆரோனும் மோசேயை தள்ளிவிட்டு, தாங்கள் பெரியவர்களாக, தலைவர்களாக நினைத்தனர். ஆனால் ஆண்டவரோ மிரியாமை யார் நடுவிலும் குடியிருக்க முடியாதபடி குஷ்டரோகம் பிடிக்க செய்தார். அப்பொழுது, **"அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும். தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்துவிழுந்த பிள்ளையைப்போல அவள் ஆகாதிருப்பாளாக என்றான்." (எண்ணாகமம் 12:11,12)**. இப்பொழுதுதான் இவ்விருவருக்கும் புத்தி வந்தது. மறுபடியும் ஆரோன் மோசேயை நோக்கி கெஞ்ச தொடங்கினார். **"அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்." (எண்ணாகமம் 12:13)**. இங்கு மோசே இஸ்ரேல் மக்களுக்காக, அவர்களை ஆண்டவர் மன்னிக்கும்படியாய் எப்படி கெஞ்சினாரோ, அப்படியே தன் சகோதரிக்காகவும் கெஞ்சினார். இங்கு ஒரு இடத்தில் கூட மிரியாமும், ஆரோனும் இப்படி பேசின பொழுதிலும், அவர் அவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தையும் கூறவில்லை. மக்களிடம் தான் யார் என்று நிரூபிக்க முற்படவில்லை. அல்லது தேவனிடம் முறையிடவில்லை. காரணம் அவர் இவை எவற்றையும் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர் எண்ணமெல்லாம் ஆண்டவருக்கு முன்பாக உண்மையாக வாழ்ந்து, அவர் பணி செய்ய வேண்டும் என்பதே. எனவே ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒரு நல்ல தலைவனாக, நல்ல தகப்பனாக அவரால் செயல்பட முடிந்தது.

இங்கு மோசேயின் வேண்டுதலை கேட்ட ஆண்டவர், **"கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக்கொள்ளப்படக்கடவள் என்றார். அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்த்துக்கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம்பண்ணாதிருந்தார்கள். பின்பு, ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்." (எண்ணாகமம் 12:14-16)**. இவ்வாறு மோசே பார்வோனின் மூலமாக, மற்ற புறஜாதிகள் மூலமாக, தன் சொந்த ஜனங்கள் மூலமாக, இறுதியாக தன் ஊழியத்தில் தன்னோடு தோள் கொடுத்து ஊழியம் செய்த தன் சொந்த சகோதர சகோதரி மூலமாகவும்,

முறுமுறுப்புகள் எதிர்ப்புகள் ஏற்பட்டாலும், அமைதியாக அவர் தேவப்பணி செய்வதனையை ஜாக்கிரதையாக கொண்டு இருந்தார். தேவனுக்கு முன்பாக எவ்வாறு பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தேவ சமூகத்திலேயே தங்கி இருப்பதையே அவர் பாக்கியமாக எண்ணினார். தேவனுடைய சாயலையும், பிரசன்னத்தையும், வல்லமையுமே அவர் வாஞ்சித்தார். இவ்வாறாக அவர் தொடர்ந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார். அதனை தொடர்ந்து நாம் பின்வரும் பாகங்களில் தியானிப்போம். மோசேயை போல, தேவனிடமிருந்தே ஒரு நேரடியான சாட்சியை பெறும் வாழ்க்கையை வாழும் படியாய், நாமும் வாஞ்சிப்போமாக. இவ்வுலகத்தில் எதைக்காட்டிலும், ஆண்டவரின் சமூகத்தில் தங்கியிருப்பதையே நாடுவோமாக. அவர் நமக்காக என்ன சித்தம் / பணி வைத்திருக்கிறாரோ, அதனையே செய்ய ஜாக்கிரதையாக இருப்போமாக. தேவன் நம்மை குறித்தும் ஒருநாள் நிச்சயம் சாட்சி கொடுப்பார். ஆமென், அல்லேலூயா.



ஆண்டவர் மோசேயை தெரிந்து கொண்டு, அவர் மூலமாய் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து மீட்டெடுத்து கானானுக்கு வழி நடத்தினார் என்பதையும், அப்படியாக வழி நடந்து வருகையில் இஸ்ரவேல் மக்கள் மூலமாகவும், அந்நிய மக்கள் மூலமாகவும், தன் சொந்த வீட்டார் மூலமாகவும் ஏற்பட்ட எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும், மோசே தேவனுடைய ஊழியத்தை ஒரு நல்ல தலைவனாக இருந்து எவ்வாறு வல்லமையாய் செய்தார் என்பதையும், ஆண்டவரே கோபப்பட்டு இஸ்ரவேல் மக்களை அழிக்க நினைத்தபொழுதும், அவர்களுக்காக ஒவ்வொரு முறையும் தேவனிடத்தில் பரிந்து பேசி, அவர்களின் ஒவ்வொரு முறுமுறுப்புகள் மத்தியிலும், அழுகுரல் மத்தியிலும், அதனை சகித்து ஒரு நல்ல தகப்பனாய் இருந்து, அவர்களுக்கு தேவையான ஒவ்வொன்றையும் (வான மன்னா உள்பட) தேவனிடத்திலிருந்து பெற்று தந்ததையும், தேவ சமூகத்தில் 40 நாட்கள் தரித்திருந்து தேவ கற்பனையைப் பெற்று தேவனோடு ஐக்கியப்பட்டு இருந்ததினிமித்தம், அவருடைய மாம்ச முகத்தில் தெய்வீக பிரகாசம் உண்டானதையும், எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்ரவேல் மக்கள், ஆரோன், மிரியாம் உள்பட மோசேக்கு விரோதமாய் பேசிய பொழுது, தேவனே அவருக்காக வழக்காட வந்து, மோசேக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கூறி, அவரை தம்முடைய தாசன் என்று அழைத்ததையும், நாம் முதல் நான்கு பாகங்களில் கண்டோம். தொடர்ந்து ஐந்தாம் பக்கத்திலும் மோசே எவ்வாறு ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் செயல்பட்டார் என்பதை தியானிப்போம்.

எகிப்தில் இருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் கானானை சுதந்திரிக்க வேண்டும் என்பதே தேவசித்தமாய், திட்டமாய் இருந்தது. அதற்காக, **"கர்த்தர் மோசேயை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான்தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு**

பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்பவேண்டும் என்றார். மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்பினான்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள்." (எண்ணாகமம் 13:1-3). இங்கு 12 கோத்திரத்திற்கு 12 பேராக அனுப்பப்பட்டனர். அதில் முக்கியமாக, யூதா கோத்திரம் சார்பாக காலேபும், எப்பிராயீம் கோத்திரம் சார்பாக யோசுவாவும் அனுப்பப்பட்டனர். அவர்கள் எவ்வாறு தேசத்தை வேவு பார்க்க வேண்டும் என்பதையும் மோசே அந்த 12 தலைவர்களுக்கும் விளக்கினார். "அவர்களை மோசே கானான்தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்புகையில், அவர்களை நோக்கி: நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம்பேரோ என்றும், அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள்; தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றான். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருந்தது." (எண்ணாகமம் 13:17-20).

இதன் பிறகு, "அவர்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பினார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம். அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு

**வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.“ (எண்ணாகமம் 13:25-33).** இங்கு காலேப் தைரியத்தோடு, ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்தோடு, இம்மட்டும் நடத்தின ஆண்டவர், இனிமேலும் நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் தேசத்தை சுதந்தரிக்க ஆயத்தமானார். ஆனால் மற்றவர்களோ தங்கள் சுய பெலத்தை நம்பி தங்களால் எதுவும் செய்யக்கூடாது என்றனர். **“அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டுவந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.“ (எண்ணாகமம் 14:1-4).**

இங்கு காலேப், யோசுவா தவிர மற்ற 10 பேரும் கூறினதை கேட்ட மக்கள், ஆண்டவரையோ, மோசேயையோ அல்லது, காலேப், யோசுவா அவர்களின் வார்த்தைகளையோ நம்பாமல் / கேட்க மனதில்லாமல்,. துர் செய்தி சொன்னவர்கள் கூறியதே சரி என்று எண்ணி பேசுவது வேதனைக்குரியதாகும். அக்காலத்தில் வல்லரசாக இருந்த எகிப்தின் அரசனான பார்வோன் கையிலிருந்தே, அற்புத அடையாளங்கள் செய்து விடுவித்த தேவன், இவ் வனாந்தர யாத்திரையில் ஒரு குறைவும் இல்லாமல் அற்புத விதமாய் போஷித்து பாதுகாத்து வரும் தேவன், நிச்சயமாய் தாம் சொன்னபடியே கானானை சுதந்தரிக்கச் செய்வார் என்ற விசுவாசம் அவர்களிடத்தில் இல்லாதபடியினால் இவ்வாறு செயல்பட்டனர். இதில் முக்கியமாக, **நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்** என்பது அவர்கள் ஆண்டவரை மாத்திரமல்ல, தங்களை இம்மட்டும் ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து வழி நடத்திய மோசேயையும் புறக்கணித்தனர் என்பது வெளிப்படுகிறது. **“அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்குமுன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்.“ (எண்ணாகமம் 14:5).** இங்கு இஸ்ரவேல் மக்கள் தவறான வழிக்கு சென்று விடக்கூடாது என்பதற்காக அவர் எவ்வளவாய் ஜனங்கள் முன் தன்னை தாழ்த்துகிறதை காணலாம். மேலும், **“தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல**

**தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்." (எண்ணாகமம் 14:6-9).** இங்கு மோசே, ஆரோன், காலேப், யோசுவா என்ற நால்வரும் ஒருபுறமும் மற்றவர்கள் மறுபுறமும் போராடுகையில், **"அப்பொழுது அவர்கள்மேல் கல்லெறியவேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்; உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது." (எண்ணாகமம் 14:10).** இங்கு மறுபடியும் தேவன் மோசேக்கு ஆதரவாக அவருக்காக வழக்காட இறங்கினார். **"கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்குப் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்." (எண்ணாகமம் 14:11,12).**

இங்கு தேவனே இஸ்ரவேல் மக்களின் நடவடிக்கை கண்டு, அவர்களை அழித்து மோசேயை பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறிய பொழுதும், **"மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள். ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதேபோனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே. ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக. உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான்."**

(எண்ணாகமம் 14:13-19). இங்கு மோசே ஒரு சாதாரண மாம்ச சரீரம் உள்ள மனிதனாய் இருந்தபொழுதிலும், சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் அவர் இவ்வாறு பேசி, இரக்கத்திற்காக மன்னிப்பிற்காக கெஞ்சி நிற்பது, அவர் எவ்வளவாய் தேவனோடு ஐக்கியத்தில் இருந்தார் என்பதையும், அதே நேரத்தில் பொல்லாத இஸ்ரவேல் மக்கள் தங்கள் அக்கிரமத்தினால் அழிந்து போகாதபடி, அவர்களை காக்கும் ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருப்பதையும் காணலாம். இவ்வாறு மோசேயின் இந்த அருமையான விண்ணப்பத்தை கேட்ட தேவன், **"அப்பொழுது கர்த்தர்: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்." (எண்ணாகமம் 14:20)** என்றார்.

ஆனால் அதே நேரத்தில், **"பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள். உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள். கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல் என்றார்." (எண்ணாகமம் 14:26-35).** மேலும், **"அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து, சபையார் எல்லாரும் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருந்தார்கள். மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது,**

**ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள். அதிகாலமே அவர்கள் எழுந்திருந்து: நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிந்தார்கள். மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார் என்றான். ஆனாலும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத் துணிந்தார்கள்; கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை. அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கிவந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்தினார்கள்." (எண்ணாகமம் 14:36-45).**

இங்கு இஸ்ரவேல் மக்களின் முரட்டாட்டமான, முட்டாள்தனமான செய்கையை நாம் காணலாம். தேவன் முன் செல்ல சொன்ன போது முன் செல்லாமல், பிறகு தேவன் அவர்களோடு தான் முன்செல்ல இருக்கப் போவதில்லை என்று கூறின பொழுது அவர்கள் முன் செல்வதும், அவர்கள் முழுக்க முழுக்க தங்கள் சுய பெலனையே நம்பி செயல்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் மோசேயோ ஞானவானாக, சாந்தமுள்ளவராக இஸ்ரவேல் மக்கள் அழிந்து போகாதபடி காத்தார். தேவன் அவரைப் பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறின பொழுதும், தன் நலனையோ தன் சந்ததியாரின் நலனையோ பாராமல், இஸ்ரவேல் மக்களின் நலனையே அவர் சிந்தித்து செயல்பட்டது, அவர் எவ்வளவு நல்ல தலைவனாய் தகப்பனாய் இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. **"லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட மோசேக்குமுன்பாக எழும்பி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்." (எண்ணாகமம் 16:1-3).** இங்கு மறுபடியும் கோராகு மற்றும் அவனோடு இருந்தவர்கள் மூலமாக பிரச்சனை உண்டான பொழுது, மோசேயை தள்ளிவிட்டு தாங்கள் தலைவராக வேண்டும் என்ற நினைப்பில் இவ்வாறாக பேசினர். **"மோசே அதைக் கேட்டபோது, முகங்குப்புற விழுந்தான். பின்பு அவன் கோராகையும் அவனுடைய எல்லாக் கூட்டத்தையும் நோக்கி: நாளைக்குக் கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேரத் தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவனைத் தம்மிடத்தில் சேரக் கட்டளையிடுவார். ஒன்று செய்யுங்கள்;**

**கோராகே, கோராகின் கூட்டத்தார்களே, நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு, நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு, கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள் என்றான். பின்னும் மோசே கோராகை நோக்கி: லேவியின் புத்திரரே, கேளுங்கள்; கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன்நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்ததும், அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்கு அற்பகாரியமோ? இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ? இதற்காக நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்றான்." (எண்ணாகமம் 16:4-11).** இங்கு மோசே இவர்களோடு வழக்காடுவதிலிருந்து, அவர்கள் மோசேயின் தலைவன் பட்டதை மட்டுமல்ல, ஆரோனின் ஆசாரியப் பட்டத்தையும் பறித்து, தாங்களும் தங்கள் சந்ததியும் ஜனங்கள் முன்பாக மேன்மையடைய வேண்டும் என்று எண்ணினார்.

**"பின்பு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்பினான். அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை; இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டுவந்தது அற்பகாரியமோ, எங்கள்மேல் துரைத்தனமும் பண்ணப்பார்க்கிறாயோ? மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்." (எண்ணாகமம் 16:12-14).** இங்கு மோசே அவர்கள் செய்கிற தவற்றை சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த நினைத்தார். ஆனால் அவர்களது மறுமொழியோ, அவர்களை மேலும் மேலும் கேடான பாதைக்கு வழி நடத்திச் சென்றது. **"அப்பொழுது மோசேக்குக் கடுங்கோபம் மூண்டது; அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்றான். பின்பு மோசே கோராகை நோக்கி: நீயும் உன் கூட்டத்தார் யாவரும் நாளைக்குக் கர்த்தருடைய சந்நிதியில் வாருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனும் வந்திருங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் தூபவர்க்கத்தைப் போட்டு, தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள்**


**என்றான். அப்படியே அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள். அவர்களுக்கு விரோதமாகக் கோராகு சபையையெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடிவரும்படி செய்தான்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது." (எண்ணாகமம்** 16:15-19). தன் மீது எவ்வளவோ வீண்பழி சுமத்தப்பட்ட பொழுதும், அப்பொழுதெல்லாம் கோபம் கொள்ளாமல் பொறுமையாக இருந்த மோசே, இங்கு பரிசுத்த ஆசாரிய ஊழியத்தை கைப்பற்ற, இந்த பொல்லாதவர்கள் நினைத்தபொழுது கோபம் கொண்டார். யார் உண்மையாக தேவ சமூகத்தில் பணி செய்ய தகுதியுள்ளவர் என்பதை நிரூபிக்க முயன்றார். ஒருபுறம் கோராகு சபை மக்களை எல்லாம் ஒன்று திரட்டிய பொழுதிலும், ஆண்டவர் மோசேக்காக மறுபடியும் சபை நடுவில் இறங்கினார். **"கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி: இந்தச் சபையைவிட்டுப் பிரிந்துபோங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்றார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று சபையாருக்குச் சொல் என்றார்." (எண்ணாகமம்** 16:20-24).

இங்கு தேவ கோபம் இஸ்ரவேல் மக்களை முழுவதும் அழிக்காமல், பொல்லாத கோராகின் கூட்டத்தை மட்டும் அழிக்கும்படியாய், **"உடனே மோசே எழுந்திருந்து, தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போனான்; இஸ்ரவேலின் மூப்பரும் அவனைப் பின்சென்று போனார்கள். அவன் சபையாரை நோக்கி: இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றான். அப்படியே அவர்கள் கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போனார்கள்; தாத்தானும் அபிராமும் வெளியே வந்து, தங்கள் பெண்ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள். அப்பொழுது மோசே: இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்களென்றால், சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள். கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப்போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்றான். அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது; பூமி தன் வாயைத்**

திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள். அவர்களைச் சுற்றிலும் இருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலைக்கேட்டு, பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என்று சொல்லி ஓடினார்கள். அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது." (எண்ணாகமம் 16:25-35). இங்கு மோசே இவ்வாறு பொல்லாப்பு மொத்த இஸ்ரேல் மக்களையும் அழிக்காதபடி காத்தாலும், "மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள் என்றார்கள். சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடி ஆசரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை காணப்பட்டது. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள்." (எண்ணாகமம் 16:41-43).

இங்கு பொல்லாத கோராகின் கூட்டத்தை கர்த்தரே அற்புதவிதமாய் அழித்த பொழுது, அதை கண்டு மனம் திரும்ப வேண்டியவர்கள், **கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள்** என்று மோசேயையும் ஆரோனையும் பார்த்து கூறுவது, அவர்களின் அறியாமையின் உச்சத்தை காண்பிக்கிறது. இங்கு மறுபடியும், "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:இந்தச் சபையாரை விட்டு விலகிப்போங்கள்; ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்." (எண்ணாகமம் 16:44,45). ஆனால் இந்த முறை கர்த்தரிடத்திலிருந்து வாதை தொடங்கியது என்பதை உணர்ந்த மோசே, "மோசே ஆரோனை நோக்கி: நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்; கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான். மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர். வாதை நிறுத்தப்பட்டது; அப்பொழுது ஆரோன் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பிவந்தான்." (எண்ணாகமம் 16:46-50). இங்கு மறுபடியும், மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் முழுவதும் அழிந்து போகாதபடி, கர்த்தருடைய சமூகத்தில் அவர்களுக்காக கெஞ்சிப் பிராத்தித்து, அவர்களுக்காக பாவ நிவர்த்தி செய்து, அவர்களில் உண்டான வாதையை, அழிவை தடுத்து நிறுத்தினார். இவ்வாறு ஆண்டவரே அவர்களை மன்னிக்க மனதில்லாமல், அழிக்க நினைத்தும், தேவனுடைய எச்சரிப்பை உணராமல், மறுபடியும்

மறுபடியும் இஸ்ரேல் மக்கள் முரட்டாட்டம் செய்தும், பொறுமையாய் யாவற்றையும் சகித்து, அவர்களுக்காக கெஞ்சி மன்றாடி, பாவ நிவர்த்தி செய்து, ஆவியிலும் ஆத்தூமாவிலும், சரீரத்திலும் சோர்வடையாமல், தன் நலனையோ, தன் சொந்த குடும்பத்தாரின் நலனையோ, சந்ததியாரின் நலனையோ பாராமல், தொடர்ந்து ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை மோசே வழிநடத்தினார். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பையே இன்று ஆண்டவருக்காய் வாழும் நம்மிடம் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். இவ்வுலகம் முழுவதும் பொல்லாபிற்குள் கிடந்தாலும், எல்லாரும் ஆண்டவருடைய வழியை விட்டு வழி விலகிப் போனாலும், அதன் மத்தியிலும் ஆண்டவருடைய அன்பை, திட்டத்தை, பரம கானானை (பரலோக ராஜ்யத்தை) பற்றி கூறி, அதனை நோக்கி தானும் நடந்து, மற்றவர்களையும் வழி நடத்துகிற மோசேக்களையே ஆண்டவர் இன்றும் தேடுகிறார். மோசேயைப் போல, ஆண்டவருக்காக ஊழியம் செய்ய நம்மை இவ்வேளையிலும் அர்ப்பணிப்போமாக. தொடர்ந்து மோசேயை குறித்து வரும் பாகங்களிலும் தியானிப்போம். என்றும் மாறாத கர்த்தர், நம்மை வழிநடத்துவாராக. ஆமென், அல்லேலூயா.



கடந்த ஐந்து பாகங்களிலும், ஆண்டவர் மோசேயை எவ்வாறு தெரிந்து கொண்டார், தலைவனாக்கினார், தமது நியாய பிரமாணத்தை கொடுத்தார், எவ்வாறு தமது மகிமையினால் நிரப்பினார், அவரைக் கொண்டு எகிப்த்திலும், வழி பிரயாணத்திலும் எவ்வாறு வல்லமையான காரியங்களை செய்தார் என்பதையும், அதே நேரத்தில் இவை எல்லாவற்றின் மத்தியிலும், இஸ்ரவேல் மக்களின் கீழ்படியாமையையும், முறுமுறுப்புகளையும், பாவங்களையும், ஆண்டவருக்கு மற்றும் மோசேக்கு விரோதமான செயல்களையும், அவிசுவாசத்தையும், நன்மைக்கு தீமை செய்ததையும், மோசேயின் சொந்த சகோதர, சகோதரியே அவருக்கு விரோதமாய் எழும்பினதையும், இவை எல்லாவற்றின் மத்தியிலும், ஆண்டவரே கோபப்பட்டு இஸ்ரவேல் மக்களை அழிக்க நினைத்த வேளையிலும், தன் பேரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கி போட்டாலும் பரவாயில்லை, இஸ்ரவேல் மக்கள் அழிவிலிருந்து காக்கப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு பக்கம் தேவன் தந்த மகிமையான அனுபவங்கள் ஊடாக நல்ல தலைவனாய் செயல்பட்டும், மறுபக்கம் இஸ்ரேல் மக்களை ஒரு தகப்பன் வழிநடத்துவது போல, எத்தீங்கும் அவர்களை அழித்துப்போடாத படி அவர்களுக்காக திறப்பின் வாயிலில் எப்பொழுதும் நின்றதை இதுவரையிலும் கண்டோம். ஆம் ஒரு பக்கம் ஆண்டவருக்கு நல்லதாசனாய், சிநேகிதனாய், நல்ல ஊழியனாய் இருந்து, தன் வாழ்வை அவர் பணிக்கென அர்ப்பணித்தார். அதே நேரத்தில் தன் சொந்த குடும்பத்தாருக்காக, தன் பிள்ளைகளுக்காக என எதையும் எதிர்பாராமல், தேவ ஜனங்களை வழிநடத்துவதிலேயே நோக்கமாய் இருந்தார். இஸ்ரவேல் மக்கள் செய்த பாவத்தினால் உண்டான குறைவுகளையும், அலைச்சல்களையும், மனம் உவந்து ஏற்றுக் கொண்டார். ஒரு நொடிப் பொழுது கூட ஏன் தனக்கு இவ்வளவு பெரிய பாரமான பணி என்று எண்ணாமல், வேதம் கூறுகிறபடி மோசே தேவனுடைய வீட்டில் எங்கும்

உண்மையுள்ளவராய் இருந்தார். இந்த ஆறாம் பாகத்திலும் இதை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**எண்ணாகமம் 20:1** கூறுகிறது, **"இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன்வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில், மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்."**, இங்கு மிரியாமின் மரணத்தை காண்கிறோம். **யாத்திராகமம் 2:1-4** வசனங்கள் கூறுகிறது, **"லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான். அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள். அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்."**. இங்கு மோசே பிறந்த பொழுது அவருடைய தாய் தகப்பன்மார்கூட மோசேயை காப்பாற்ற முடியாமல், நாணற் பெட்டியில் வைத்து சென்றபோதும், மிரியாம் அவ்விடத்தை விட்டு செல்லாமல், என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படி நின்ற மிரி யாமையே தேவன் பயன்படுத்தினார். பார்வோனின் குமாரத்தி பிள்ளையின் மேல் இரக்கமுற்றதை கண்ட மிரியாம், தைரியத்துடன் பார்வோனின் குமாரத்தி முன் சென்று, மோசே அழிக்கப்படாமல், பார்வோனின் அரண்மனையில் வளர, அதுவும் மோசேயின் சொந்த தாயின் மூலமாகவே வளர, மிரியாம் செய்த புத்தியான செயல்கள் மோசேயை இப்பொழுது இப்படிப்பட்ட தலைவனாய் நிறுத்தியது.

**எபிரேயர் 11:23-26** வசனங்களில், **"மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."**. ஆம் மோசே வளரும் பொழுது எகிப்தியனாய் பார்வோனின் குமாரத்தின் மகன் என்று வளர்ந்தாலும், அவன் ஒரு எபிரேயன் என்பதை அவன் அறிந்து கொள்ளும்படியாகவே, மிரியாமால் மோசே என் தாயின் மூலமாக வளர்க்கப்பட்டார். மேலும் **வசனம் 26** கூறுகிறபடி, இனிவரும் பலனாகிய நித்திய ஜீவனை (பரம கானானை), அவர் அறிந்திருந்து, கிறிஸ்துவினிமித்தம் (தேவப்பிள்ளையாய் வாழ்வதினிமித்தம்) வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினார். **அப்போஸ்தலர் 7:22-25** வசனங்கள் கூறுகிறது, **"மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும்**

வல்லவனானான். அவனுக்கு நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை.". இங்கு மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களில் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவராய் இருந்தார். இதற்கு காரணம் ஆண்டவர் மிரியாமை பயன்படுத்தியதே. மேலும் தன் ஜனங்களைப் போய் பார்க்க வேண்டும், அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் மோசேக்கு தன்னுடைய இளமைப்பருவத்திலேயே உண்டாயிற்று. இதற்கு காரணம் மோசே தன் சொந்த தாயின் மூலமாகவே வளர்க்கப்பட்டது ஆகும். ஆம், மோசே இஸ்ரவேல் மக்களை குறித்து பாரப்பட, தான் சுகமாக இருக்கிறோம் தன் சொந்த குடும்பமோ, மக்களோ அடிமைத்தனத்தில் பாடுபடுகிறார்களே என்பதை மிரியாம் மூலமாகவே மோசே அறிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட தன் மூத்த சகோதரியாகிய மிரியாமும் தேவத் திட்டத்தில் இருக்கும் படியாய், தன் வாழ்வில் இறுதி ஓட்டத்தை சமாதானத்தோடு முடிக்கும்படியாய் மோசே மிரியாமை இறுதிவரை பாதுகாத்தார்.

எண்ணாகமம் 20:2-5 வசனங்களில், "ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள். ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணி: எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும். நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்தது என்ன; விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்.". இங்கு மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் எப்பொழுதும் போல் முறுமுறுக்க தொடங்கினர். தாங்கள் செய்த பாவத்தையோ, கீழ்ப்படியாமையையோ, அவிசுவாசத்தையோ பற்றி நினையாமல், எகிப்தை குறித்த நினைவுகளே அவர்களிடம் இருந்தது. ஆண்டவர் எத்தனையோ அற்புதங்களை அவர்கள் முன்பாக பிரத்தியட்சமாய் செய்த பொழுதிலும், அவர்களோ தொடர்ந்து ஆண்டவரையும், மோசேயையும் குறை கூறினர்.

எண்ணாகமம் 20:6-8 வசனங்களில், "அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ

**அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்.**". இங்கு மறுபடியும் மோசேயும், ஆரோனும் தேவ சமூகத்தில் முகங்குப்புற இந்த ஜனத்திற்காக விழுந்தார்கள். தேவன் முன்பு போலவே செயல்பட மோசேயிடம் கூறினார். **எண்ணாகமம் 20:9-11** வசனங்களில், **"அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச்செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.**". இங்கு மறுபடியும் அற்புதம் நிகழ்ந்தது. இஸ்ரவேல் மக்களின் தேவை சந்திக்கப்பட்டது. ஆனால் இங்கு முதன்முறையாக மோசே ஜனங்களின் முரட்டாட்டத்தை கண்டு கோபமடைந்தவராய், கன்மலையை பார்த்து பேசுவதற்கு பதிலாக அதை அடித்தார். இதனால், **"பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.**" **(எண்ணாகமம் 20:12)**. இங்கு ஆண்டவர் முதல் முறையாக மோசே மற்றும் ஆரோனின் அவிசுவாச கிரியை பற்றியும், அதன் நிமித்தம் அவர்களும் கானானை சென்றடையப்போவதில்லை என்றும் கூறினார். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, மோசேயோ ஆரோனோ இதற்காக ஒரு வார்த்தை கூட பிரதியுத்திரம் கூறவில்லை. தங்களை மன்னித்து தாங்களும் கானான் செல்ல அனுமதிக்கும்படியாய் கேட்கவில்லை. ஆம் அவர்கள் ஆண்டவர் என்ன தீர்ப்பு செய்தாரோ அது நியாயமானது என்று எண்ணினர். இத்தனை வருடம் கானானுக்குள் செல்லவே பிரயாணப்பட்டு வருகிறோமே, இந்த கடைசி நேரத்தில் தங்களால் பிரவேசிக்க முடியாமல் போகிறதே என்று எண்ணவில்லை. அதற்கு பதிலாக தாங்கள் இல்லாவிட்டாலும் மற்ற யார் மூலமாவது இஸ்ரவேல் மக்கள் கானானை சென்று சேர்வார்கள் என்று தேவ தீர்ப்பை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து தேவ பணி செய்ய தங்களை அர்ப்பணித்தனர்.

**எண்ணாகமம் 20:14-17** வசனங்களில், **"பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்குத் தெரிந்திருக்கிறது. கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவிகொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம். நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு**

கொடுக்கவேண்டும்; வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், ராஜபாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச்சொன்னான்.“. இங்கு ஏசாவின் வம்சத்தாரான ஏதோமியர், தங்களுக்கான ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தி ஆண்டு கொண்டு இருந்தனர். ஆனால் இஸ்ரேல் மக்களோ தங்கள் முரட்டாட்டத்தினிமித்தம் இன்னும் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. இங்கு மோசே மிகுந்த பணிவோடு, அதே நேரத்தில் இஸ்ரவேல் ஏதோமின் சகோதரன் என்பதை நினைவுபடுத்தி, தாங்கள் சமாதானத்தோடு செல்ல ஏதோமின் ராஜாவை வேண்டுகிறார். ஆனால், “அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.“ (எண்ணாகமம் 20:18). “அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனை நோக்கி: நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம்; நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம்; வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள். அதற்கு அவன்: நீ கடந்துபோகக்கூடாது என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்கப் புறப்பட்டான். இப்படி ஏதோம் தன் எல்லைவழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரவேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலர் அவனை விட்டு விலகிப்போனார்கள்.“ (எண்ணாகமம் 20:19-21). இங்கு ஏதோமின் ராஜா, தன் சொந்த இனத்தாரான இஸ்ரவேல் மக்களுக்கு உதவாமல் அவர்களை எதிர்க்க புறப்பட்டான். இங்கு தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்து ஏதோமை எதிர்க்காமல், அவனை விட்டுவிலகி வேறு வழியாய் இஸ்ரேல் மக்களை வழிநடத்தினார் மோசே. மற்ற ராஜாக்களை எதிர்த்தது போல் ஏதோமை எதிர்த்திருக்கலாம். ஆனால் அது தேவத்திட்டம் அல்ல என்பதை உணர்ந்திருந்த மோசே ஏதோமை தொடாமல் விலகிச் சென்றார்.

எண்ணாகமம் 20:22-26 வசனங்களில், “இஸ்ரவேல் புத்திரரான சபையார் எல்லாரும் காதேசை விட்டுப் பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்குப் போனார்கள். ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர் என்னும் மலையிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான். மேரிபாவின் தண்ணீரைப்பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்ப்படியாமற்போனபடியினால், நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை. நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, ஆரோன் உடுத்திருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக; ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான் என்றார்.“. எப்படி மிரியாமை ஆண்டவர் எடுத்துக் கொண்டாரோ, அதேபோல் மோசேயோடு தொடர்ந்து இஸ்ரவேல் மக்களை நடத்தி, குறிப்பாக கனமான ஆசாரிய ஊழியத்தை செய்த ஆரோனையும் ஆண்டவர் எடுத்துக்

கொள்வதை காணலாம். ஆனால் அதற்கு முன்பாக அவனுடைய இடத்திற்கு அவனுடைய குமாரனாகிய எலெயாசாரை பிரதிஷ்டை செய்ய ஆண்டவர் கூறினார். **எண்ணாகமம் 20:27-29** வசனங்களில், **"கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்; சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறினார்கள். அங்கே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்தான்; பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்கினார்கள். ஆரோன் ஜீவித்துப்போனான் என்பதைச் சபையார் எல்லாரும் கண்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண்டாடினார்கள்."**. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய பரிபூரணமான சித்தத்திற்கு, திட்டத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதை காணலாம். குறிப்பாக **கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்** என்ற வாக்கியம், எந்தவித சுயசித்தமோ, மாற்றமோ இல்லாமல் கர்த்தர் கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும் மோசே செய்வது, அவர் எவ்வளவாய் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருந்தார் என்பதற்கு ஆதாரம். இங்கு தன் மூத்த சகோதர, சகோதரியை இழந்தவராய், தன் வாழ்வின் ஆரம்பத்திலிருந்து தற்பொழுது வரை, பல்வேறு சூழ்நிலைகளில் தனக்கு உறுதுணையாய் இருந்தவர்களை, இழந்த பின்னரும், தொடர்ந்து தேவ ஊழியத்தை அடுத்த தலைமுறையுடன் சேர்ந்து செய்ய தொடங்கினார். **மீகா 6:4** கூறுகிறது, **"நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்."**, என்று.

**எண்ணாகமம் 21:4,5** வசனங்களில், **"அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையைவிட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம்பண்ணினார்கள்; வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள். ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்."**. இங்கு மறுபடியும் நெடுந்தூர, நீண்ட கால பிரயாணத்தினிமித்தம், இஸ்ரவேல் மக்கள் மனமடிவடைந்தார்கள். மேலும் தேவன் அனுதினமும் அருளிய, வான மன்னாவையும் அவர்கள் அற்பமாக எண்ணினர். வசனம் ஐந்து கூறுகிறது **ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி** என்று. இதனால், **"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்." (எண்ணாகமம் 21:6)**. இங்கு தேவனுடைய கோபத்தையும், அவரால் உண்டான வாதையையும் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள், **"அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக**

**விண்ணப்பம்பண்ணினான்."** (**எண்ணாகமம்** 21:7). இங்கு மறுபடியும் மோசே ஒரு நல்ல தகப்பனாய் இருந்து, ஜனங்களுக்காக தேவனிடம் வேண்டுதல் செய்தார். **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்."** (**எண்ணாகமம்** 21:8,9). ஆரம்பத்தில் மோசேயை கொண்டு பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிட்டது முதல், இங்கு ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அது ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தது வரை, மோசே செய்த ஒவ்வொரு செயலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் காணப்படுகிறது.

**எண்ணாகமம்** 22 **முதல்** 24 அதிகாரங்களில் மோவாப்பின் ராஜாவான சிப்போரின் குமாரனாகிய பாலாக், தேவ ஜனங்களான இஸ்ரவேல் மக்களை நேரடியாக எதிர்க்க முடியாது என்பதை அறிந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாம் மூலமாக அவர்களை சபிக்கப்பட்டவர்களாக்க நினைத்தான். ஆனால், ஆண்டவரோ அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களை சபிப்பதற்கு பதிலாக, பிலேயாம் அவர்களை ஆசிர்வதிக்கவே தேவன் கட்டளையிட்டார். இவை ஒன்றையும் மோசேயோ, இஸ்ரவேல் மக்களோ அறிந்திருக்கவில்லை. இதனால் பிலேயாமின் ஆலோசனையின்படி, மீதியான் தேசத்து ராஜாவாகிய பாலாக் அவர்களை வேறு விதத்தில் வீழ்த்த நினைத்தான். **மீகா** 6:5 கூறுகிறது, **"என் ஜனமே, மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும், பேயோரின் குமாரனான பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது இன்னதென்றும், சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்துகொள்ளும்படி நினைத்துக்கொள்."**, என்று. **எண்ணாகமம்** 25:1-3 வசனங்களில், **"இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது."**. இங்கு தேவ ஜனங்களை போரிட்டு வீழ்த்த முடியாமல், அவர்களை ஆவிக்குரிய நிலையிலே சபிக்கவும் முடியாமல் போனாலும், அவர்களில் இருந்த மாம்ச பலவீனத்தை கண்டு, அதன் மூலம் அவர்களை தேவ பாதுகாப்பிலிருந்து பிரிக்க பாலாக் திட்டம் போட்டான். அவன் திட்டமிட்டபடியே இஸ்ரவேல் மக்களும் பாவத்தில் விழுந்து போயினர்.

**"கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார்.**

அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட உங்கள் மனிதரைக் கொன்றுபோடுங்கள் என்றான்.“ (எண்ணாகமம் 25:4,5). இங்கு சர்வ இஸ்ரவேலும் அழிந்து போகாதபடி காக்கப்பட, பாவம் செய்தவர்களை கொன்று அழிப்பதே ஒரே வழி என்ற தேவ நியாயத்தீர்ப்பை மோசே சற்றும் தயக்கம் இன்றி செயல்படுத்தினார். எண்ணாகமம் 25:6-9 வசனங்களில், “அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக்கொண்டுவந்தான். அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம்பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று. அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்.“. இங்கு தேவ தீர்ப்பை நிறைவேற்ற, மோசேக்கு உதவியாக, ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் செயல்பட்டான். அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர் என்ற வசனம், இஸ்ரேல் மக்களில் மாம்ச இச்சையுள்ளவர்களாய் எத்தனை பேர் இருந்தனர் என்பதை தெள்ளத் தெளிவாக காண்பிக்கிறது. அதிலும் அதை அவர்கள் எவ்வித பயமும் இன்றி வெளிப்படையாகவே செய்தது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். ஆகிலும் இப்படிப்பட்ட மக்களையும் பொறுமையோடு மோசே வழி நடத்தினார். எண்ணாகமம் 25:10-13 வசனங்களில், “கர்த்தர் மோசேயை நோக்கி: நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.“. இங்கு ஆண்டவர், மோசே ஆரோன் என்பவர்களுக்கு அடுத்தபடியாக ஜனங்களை வழிநடத்த தலைவர்களை உருவாக்கி வருவதை காணலாம். அதை மோசேயும் நன்கு உணர்ந்திருந்தார். தன்னுடைய ஊழியம் முடிவு பெற போகிறது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

எண்ணாகமம் 27:12-14 வசனங்களில், “பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்தபின்பு, உன் சகோதரனாகிய

**ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்; சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணவேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர்அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியமே.“**. இங்கு ஆண்டவர் இறுதியாக, மோசேயின் மிக நீண்ட ஊழியத்தை முடிவு பெற செய்கிறார். சீன் வனாந்தரத்தில் அந்த ஒரு விஷயத்தில் மோசே கோபப்பட்டு கன்மலையை அடித்ததினால், அவரால் கானானை சென்றடைய முடியவில்லை. ஆகிலும் தேவன் மோசேக்கு இதை ஒரு தண்டனையாக கொடாமல், தமது அனாதி தீர்மானத்தின்படியே அவரது ஓட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார். ஆகிலும் மோசே தமக்கு பிரியமான தாசரானதால், **அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார்** என்றார். இங்கு இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசம் என்று ஆண்டவர் கூறுவதில் இருந்து, ஆண்டவருடைய அனாதி தீர்மானத்தின்படி அது அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டது. அவர்கள்தான் அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு சுதந்தரிக்க வேண்டும். இதை மோசேயும் நன்கு உணர்ந்திருந்தார். எனவே தான் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லையே என்று அவர் கவலைப்படாமல், தனக்கு பின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேல் மக்களை வழிநடத்த, தன்னைப்போன்ற தலைவன் ஒருவன் வேண்டுமே என நினைத்தார். இதனால், **“அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப்போல் இராதபடிக்கு, அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றான்.“ (எண்ணாகமம் 27:15-17)**. இங்கு மோசே தனக்குபின், தன்னைப்போல ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்த ஒருவர் வேண்டுமே என்று நினைத்த அவர், ஆரோனுக்கு பதிலாக அவன் குமாரர் ஆசாரிய பட்டத்தை பெற்றது போல், தனக்குப் பின் தன் குமாரரில் ஒருவன் தலைவனாய் வரவேண்டும் என்று எண்ணாமல், இவ்வளவு காலம் தேவ ஜனங்களை வழிநடத்தியதற்கு ஆண்டவர் தன் பிள்ளைகளுக்கு ஏதாவது தர வேண்டும் என்று எண்ணாமல், தன்னை தமது அனாதி தீர்மானத்தின்படி அழைத்த தேவன், அப்படிப்பட்ட தேவ திட்டத்தில் உள்ள ஒருவரை அடுத்து தலைவராக்க வேண்டும் என்ற நினைத்தார். இங்கு அவர் சற்றும் சுயநலமின்றி செயல்படுவதை நாம் காணலாம்.

**“கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளைகொடுத்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு. அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கக்கடவன்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய**

**சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டியது என்றார்.“, (எண்ணாகமம் 27:18-21).** இங்கு ஆண்டவர் தம்முடைய பார்வைக்கு உகந்த, ஆசரிப்பு கூடாரத்தையும் மோசேயையும் விட்டு பிரியாத, கானான் தேசத்தை நிச்சயமாக தேவன் நமக்கு தருவார் என்ற விசுவாசமுள்ள, தேவ ஆவியை பெற்றிருக்கிற யோசுவாவை மோசேக்கு காண்பிக்கிறார். அதே நேரத்தில் மோசே இஸ்ரவேல் மக்களுக்கு முன்பாக யோசுவாவை அடுத்த தலைவனாய் நிறுத்த வேண்டும் என்பதையும் கட்டளையிடுகிறார். இங்கு **20ஆம் வசனம்** மிகவும் அற்புதமான ஒரு வசனம் ஆகும். தேவ ஜனங்களுக்கு முன்பாக ஆண்டவர் மோசேக்கு கனத்தை கொடுத்து, அனைவரும் அவருக்கு கீழ்ப்படித்திருக்க செய்தது போல, சர்வ இஸ்ரவேலும் யோசுவாவிற்கும் கீழ்ப்படிய, மோசே தன் கனத்தில் கொஞ்சம் யோசுவாவிற்கு கொடுக்கக் கூறினார். இங்கு ஆண்டவர் நேரடியாக செயல்படாமல், மோசேயின் மூலமாக செயல்படுவதை காணலாம். ஆம் மோசே தேவன் தனக்கு கொடுத்த மிகப்பெரிய கனத்திலிருந்து, கொஞ்ச கனத்தை மோசே கொடுக்கக் கூறுவது, ஆண்டவர் மோசே பெற்றிருந்த அதே ஆவியின் வைராக்கியம், யோசுவாவிற்குள்ளும் மோசே மூலமாகவே கடந்து செல்ல வேண்டும் என்று நினைத்ததால் தான்.

**“மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே யோசுவாவை அழைத்துக்கொண்டுபோய், அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவன்மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கட்டளைகொடுத்தான்.“ (எண்ணாகமம் 27:22,23).** இங்கு மோசேயும் ஆண்டவர் கூறியபடியே யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்து, தன்னில் இருந்த தேவ அபிஷேகத்தை யோசுவாவிற்குள் கடத்தினார். இவ்வாறாக அடுத்த தலைமுறை தலைவர்களை, தன் ஓட்டத்தை முடிப்பதற்கு முன்னரே ஏற்படுத்தி வைத்ததும், மோசே எவ்வாறு ஒரு நல்ல தலைவனாய் இருந்தார் என்பதற்கு சான்றாகும். மேலும் மிரியாம், ஆரோனை போல தன் ஓட்டமும் முடிவு பெற போகிறது என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். இவ்வாறு எவ்வித பிரதிபலனையும் தனக்கோ, தன் சந்ததியாருக்கோ எதிர்பாராமல், தேவ சித்தம், திட்டம் ஒன்றையே நிறைவேற்றி, ஓட்டத்தை சமாதானத்துடன் முடிக்க எண்ணிய மோசே, மெய்யாகவே ஒரு தேவதாசன் தான். ஒரு சிநேகிதனுடன் பேசுவது போல், சர்வ வல்லமையுள்ள ஆண்டவரிடம் பேசும் பாக்கியத்தை அவர் பெற்றிருந்தார். தொடர்ந்து மோசேயின் இறுதி கால பணியையும், அவரது ஓட்டத்தின் முடிவையும் வருகிற தியானங்களில் தியானிப்போம். நாமும் மோசேயை போல தேவனுடைய தாசர்களாய், அவருக்கு உற்ற சிநேகிதராய், எல்லாவற்றிற்கும் மேலாக அவரை அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற தேவபிள்ளைகளாய், வனாந்தர பிரயாணமாம் இவ்வுலகில், நாம் இருக்கும் வரை, தேவ சித்தம் ஒன்றையே நம் வாழ்வில் செய்து, நமது ஓட்டத்தையும் வெற்றியோடு முடிப்போமாக. ஜீவ கிரீடத்தை பெறுவோமாக. ஆமென், அல்லேலுயா.

## தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 7




கடந்த ஆறு பாகங்களிலும், மோசே எவ்வாறு சிறு வயதிலேயே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார், எவ்வாறு ஆண்டவரால் உருவாக்கப்பட்டார், ஊழியத்திற்கு என அழைக்கப்பட்டார், எகிப்தில் பார்வோனின் முன்பும், வனாந்தரத்தில் இஸ்ரவேலர் மத்தியிலும் அற்புத அடையாளங்களை செய்து எவ்வாறு தன்னை ஒரு நல்ல தலைவனாகவும், தகப்பனாகவும் வெளிப்படுத்தினார் என்பதை கண்டோம். ஆம், இஸ்ரவேல் மக்களை வனாந்தரத்தில் நடத்தினது மட்டுமல்லாமல், அவர்களுக்கு தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தை பெற்று தந்தார். மேலும் அவர்களுக்கு வான மன்னாவையும், கன்மலையிலிருந்து தண்ணீரையும் பெற்று தந்தார். எத்தனையோ தடவை இஸ்ரவேல் மக்கள் முறுமுறுத்த பொழுதும், ஆண்டவருக்கும் மோசேக்கும் எதிராய் பேசிய பொழுதும், தேவகோபம் அவர்கள் மேல் வராதபடி, அவர்களுக்காக எத்தனையோ முறை தேவ சமூகத்தில் மன்றாடி, அழிவில் இருந்து அவர்களை காப்பாற்றினார். மேலும் தேவ சமூகத்தில் தரித்திருந்து, தேவனோடு சஞ்சரித்து, ஆண்டவர் மோசேயை தன்னுடைய தாசன் என்றும், தான் ஒரு சினேகிதனுடன் பேசுவது போல் மோசேயிடம் பேசியதாகவும் ஆண்டவராலேயே சாட்சி பெற்றார். ஒரு கட்டத்தில் அவரோடு கூட இருந்து தேவ ஊழியத்தை நிறைவேற்றிய ஆரோனும், மிரியாமும் கூட மோசேக்கு எதிரியாய் பேசிய பொழுதும், அதற்காக தேவன் அவர்களை தண்டித்த பொழுதும் கூட, அவர்களுக்காகவும் அவர் பரிந்து பேசினார். இஸ்ரவேல் மக்களை எதிர்த்து புறஜாதி மக்களும், ராஜாக்களும் வந்தபொழுதும் அவர்களையும் வெற்றி கொண்டார். ஆரோனுக்கு பிறகு அவனுடைய மகன் எலெயாசரையும், தனக்குபின் தன் ஸ்தானத்தில் தலைவனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்த யோசுவாவையும் ஏற்படுத்தினார். இவை எதிலும் அவர் சுயநலம் உள்ளவராய் நடவாமல், தனக்கும் தன்

பிள்ளைகளுக்கும் எதையும் தேவனிடமோ மனிதரிடமோ எதிர்பாராமல், தேவ ஊழியத்தை இறுதிவரை உண்மையாய் செய்தார். ஒருமுறை கன்மலையை பார்த்து ஆண்டவர் பேச சொன்ன பொழுது, இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பினால் கோபம் கொண்டு கன்மலையை அடித்து அதனிடமிருந்து தண்ணீர் புறப்படும்படியாய் செய்தார். இதனால் தேவ கோபத்திற்கு ஆளாகி, கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்த பொழுதும், பொறுமையாய் தேவனின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். இவ்வாறாக தன் வாழ்நாள் முழுவதும் தேவ பணிக்கான தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்த, மோசேயின் இறுதி கால ஊழியத்தை பற்றியும், அவரது அற்புதமான மரணத்தை பற்றியும் நாம் இந்த ஏழாம் பாகத்தில் தியானிப்போம்.

**எண்ணாகமம் 32:33** இல் **"அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும், எமோரியருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், அவைகளைச் சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுத்தான்."**. இங்கு மோசே இஸ்ரவேல் மக்களில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கு, அவர்கள் யோர்தானை கடக்கும் முன்பாகவே அவர்களுக்கு தாங்கள் அதுவரை பிடித்திருந்த இடங்களை பங்கிட்டு தருவதை காணலாம். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் தங்கள் சகோதரருக்கு, கானான் தேசத்தை சுதந்தரிக்க யுத்தசன்னதராய் புறப்பட்டு வந்து உதவ வேண்டும் என்பதையும் கட்டளையிடுகிறார் (**எண்ணாகமம் 32:28-32**). இவ்வாறாக இஸ்ரவேல் ஜனத்திற்காக எல்லாவற்றையும் திட்டமிட்டு ஒரு நல்ல தலைவனாய் தகப்பனாய் இருந்து வழிநடத்திய மோசே தனக்கென ஒன்றை மட்டும் தேவனிடத்தில் வேண்டினார்.

**"அக்காலத்திலே நான் கர்த்தரை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்? நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன். கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல், என்னை நோக்கி: போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம். நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, உன் கண்களை மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் ஏறெடுத்து, உன் கண்களினாலே அதைப் பார்; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை. நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து, அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து; அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகக் கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பான் என்றார்." (உபாகமம் 3:23-28)**. இங்கு அவருடைய விருப்பம் எல்லாம் கானானுக்குள் சென்று பார்க்க வேண்டும் என்பதாகவே இருப்பதை

காணலாம். ஆகிலும் தேவ நியாயத்திற்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய தீர்ப்பை அவர் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறார். மேலும் ஆண்டவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றியும் மோசேக்கு வெளிப்படுத்தினார். **உபாகமம் 18:17-19** வசனங்களில், **“அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவர்கள் சொன்னது சரியே. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.“**. இங்கு **உன்னைப்போல** என்ற தேவனுடைய வார்த்தையானது, மோசேயை தேவன் எவ்வளவாய் கனப்படுத்தி, கிறிஸ்துவின் ஊழியத்திற்கு நிகராய் ஆண்டவர் கூறுகிறார் என்பதை காணலாம். மேலும் புதிய ஏற்பாட்டிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதனை நினைவுபடுத்துவதை காணலாம் **(யோவான் 5:46)**. மேலும் மறுரூப மலையில் மோசே ஆண்டவரோடு பேசுவதும் **(மத்தேயு 17:3)**, மோசேயின் ஊழியம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்வதை காணலாம். மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தில் பலமுறை மோசேயை மேற்கோள் காட்டி பேசுவதை நாம் சுவிசேஷ புத்தகங்களில் காணலாம். இவ்வாறாக தன் ஊழியத்தின் இறுதி காலத்தை உணர்ந்த மோசே, இஸ்ரவேல் மக்களிடம் தனது இறுதிக்கால செய்தியை உரைப்பதை பின்வருமாறு காணலாம்.

**உபாகமம் 31:1-6** வசனங்களில் **“பின்னும் மோசே போய் இஸ்ரவேலர் யாவரையும் நோக்கி: இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன்; இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார், அவரே உனக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார்; நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பாய்; கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்துபோவான். கர்த்தர் அழித்த எமோரியரின் ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும், அவர்கள் தேசத்திற்கும் செய்ததுபோலவே அவர்களுக்கும் செய்வார். நான் உங்களுக்கு விதித்த கட்டளைகளின்படி அவர்களுக்குச் செய்வதற்கு கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக்கொடுப்பார். நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.“**. இங்கு மோசே சகலத்தையும் திட்டமும் தெளிவுமாக உணர்ந்தவராக, இஸ்ரவேல் மக்களுக்கு நடக்க போகிறவற்றை பற்றி கூறியுள்ளார். **வசனம் இரண்டில்**, இனி தான் அவர்களோடு வரப்போவதில்லை என்பதையும், யோர்தானை கடந்து அவர்கள் மாத்திரமே போகப் போகிறார்கள் என்பதையும், அதே நேரத்தில் **வசனம் மூன்றில்**, கர்த்தர்தாமே அவர்களுக்கு துணை நின்று அவர்களை தொடர்ந்து வழி நடத்துவார் என்பதையும், தன் ஸ்தானத்தில் தனக்கு பதிலாக யோசுவா இருப்பார் என்பதையும் தீர்க்கமாக கூறுகிறார். மேலும் **வசனம் 4-6 இல்** நிச்சயமாக ஆண்டவர் அவர்களுக்கு முன்பாக புறஜாதி மக்களை துரத்தி,

கானானை சுதந்தரிக்க செய்வார் என்பதையும் கூறுகிறார். மேலும், **உபாகமம் 31:7,8** வசனங்களில், **"பின்பு மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவனை நோக்கி: பலங்கொண்டு திடமனதாயிரு; கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய். கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்."**. இங்கு இஸ்ரவேல் மக்களுக்கு வரும் காரியங்களை அறிவித்தது போல், யோசுவாவிற்கும் என்ன நடக்கும், அதற்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுகிறார். இவ்வாறாக மோசே எல்லாவற்றையும் கூறின, **"பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதோ, நீ மரிக்குங்காலம் சமீபித்திருக்கிறது; நான் யோசுவாவுக்குக் கட்டளை கொடுக்கும்படி, அவனை அழைத்துக்கொண்டு, ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்லுங்கள் என்றார்; அப்படியே மோசேயும் யோசுவாவும் போய், ஆசரிப்புக் கூடாரத்தில் நின்றார்கள். கர்த்தர் கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமானார்; மேகஸ்தம்பம் கூடார வாசல்மேல் நின்றது." (உபாகமம் 31:14,15).**

**உபாகமம் 31:24-30** வசனங்களில், **"மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு, மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி: நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும். நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக் கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப்பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்! உங்கள் கோத்திரங்களிலுள்ள மூப்பர் உங்கள் அதிபதிகள் எல்லாருடைய காதுகளும் கேட்கத்தக்கதாக நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், அவர்களுக்கு விரோதமாக வானத்தையும் பூமியையும் சாட்சிவைக்கவும் அவர்களை என்னிடத்தில் கூடிவரச்செய்யுங்கள். என் மரணத்திற்குப்பின்பு நீங்கள் நிச்சயமாய் உங்களைக் கெடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட வழியை விட்டு விலகுவீர்கள்; ஆகையால், கடைசி நாட்களில் தீங்கு உங்களுக்கு நேரிடும்; உங்கள் கைக்கிரியைகளினாலே கர்த்தரைக் கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வீர்கள் என்பதை அறிவேன் என்று சொல்லி, இஸ்ரவேல் சபையார் எல்லாரும் கேட்க மோசே இந்தப் பாட்டின் வார்த்தைகளை முடியும்வரையும் சொன்னான்."**. இங்கு மோசே இம்மட்டும் தான் தன் வாயால் கூறின நியாயப்பிரமாண சட்டங்களை புத்தகமாக எழுதி, லேவியராகிய தேவ ஊழியத்தை செய்பவர்களிடம் கொடுத்து, அதை கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியின் பக்கத்தில் வைக்க சொல்கிறார். மேலும் **வசனம் 27** இல் **நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக்**

கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப்பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்!. இங்கு அவர் இஸ்ரவேல் மக்களை குறை கூறுவதைப் போல் காணப்பட்டாலும், உண்மையில் அவருடைய தகப்பனுடைய உள்ளம் இங்கு வெளிப்படுகிறது. ஒருபுறம் தெளிவாக இஸ்ரவேல் மக்கள் வருங்காலங்களிலும் தேவனை விட்டு விலகிப் போவார்கள் என்பதை அறிந்திருந்தார். அதே நேரத்தில் அவர்களுக்காக பரிந்து பேசி அவர்களை நடத்த, தான் இனி இருக்கப் போவதில்லையே என்று அங்கலாய்பே, அவரை இவ்வாறு பேச செய்தது. அவர் கூறியவாறே, அவருக்கு பிறகு யோசுவாவின் காலத்திலும், நியாயாதிபதிகள் மற்றும் ராஜாக்களின் காலத்திலும், மக்கள் ஆண்டவரை விட்டு போனதை நாம் வேதத்தில் காணலாம். மோசே அவர்களை ஒரு நல்ல தலைவனாகவும் தகப்பனாகவும் இருந்து வழிநடத்தியது போல் பிறகு யாரும் எழும்பவில்லை என்பதையும் வேதத்தில் காணலாம்.

உபாகமம் 32:45-47 வசனங்களில், “மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடித்தபின்பு, அவர்களை நோக்கி: இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள். இது உங்களுக்கு வியர்த்தமான காரியம் அல்லவே; இது உங்கள் ஜீவனாயிருக்கிறது, நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி யோர்தானைக் கடந்துபோய்ச் சேரும் தேசத்தில் இதினால் உங்கள் நாட்களை நீடிக்கப்பண்ணுவீர்கள் என்றான்.“. இங்கு மறுபடியும், மறுபடியும் இஸ்ரவேலர், தேவனின் நியாயப்பிரமாண கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அதை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் கூற வேண்டும். மேலும் அதுவே அவர்களுக்கு அவர்கள் சுதந்தரிக்கப் போகும் கானான் தேசத்தில் நன்மையை தரும் என்பதை, இறுதியாக உறுதியாக கூறி அவர்களை எச்சரிக்கிறார். உபாகமம் 32:48-52 வசனங்களில், “அந்த நாளிலேதானே கர்த்தர் மோசேயை நோக்கி: நீ எரிகோவுக்கு எதிரான மோவாப் தேசத்திலுள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளிலிருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார்; நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய். நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரேயிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய்; ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பதில்லை என்றார்.“. இங்கு ஏற்கனவே ஆண்டவர் கூறியபடி மோசேயின் மரணத்திற்கு முன்னர், அவர் அபாரீம் மலையில் ஏறி, நேபோ பர்வதத்தில் இருந்து கானான் தேசத்தை பார்க்கவும், அத்தோடு அவருடைய சரீர பிரகாரமான ஓட்டம் முடியவும்

செய்யும் என்பதை கூறுகிறார். **“தேவனுடைய மனுஷனாகிய மோசே தான் மரணமடையுமுன்னே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதமாவது:“ (உபாகமம் 33:1). ஆதியாகமம் 49 ஆம்** அதிகாரத்தில் இஸ்ரவேலரின் 12 கோத்திரத்தை குறித்து எப்படி யாக்கோபு தீர்க்க தரிசனம் உரைத்தாரோ அதேபோல மோசேயும் இஸ்ரவேல் மக்களை குறித்து உரைத்த தீர்க்க தரிசனத்தை **உபாகமும் 33 ஆம்** அதிகாரத்தில் காணலாம்.

இறுதியாக, **“பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண்மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம்வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும், தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார்.“ (உபாகமம் 34:1-4).** மோசே ஒரு சிறந்த ஊழியத்தை செய்த பொழுதும், ஒரு சிறு தவற்றால் அவரால் கானான் தேசத்திற்குள் செல்ல முடியாவிட்டாலும், அதை அவர் தன் மாம்ச கண்களால் கண்ணார காண தேவன் வழி செய்தார். மோசே அதை கண்டு களிகூர்ந்தார். **“அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.“ (உபாகமம் 34:5,6).** இவ்வாறாக ஒரு அற்புதமான ஊழியத்தை செய்த மோசேயின் ஊழியம் ஓர் முடிவிற்கு வந்தது. இங்கு அற்புதமான காரியம் என்னவென்றால் அவருடைய மாம்ச சரீரத்தை கூட தேவனே எடுத்துக்கொண்டார். ஒரு சிநேகிதன் மற்றொரு சிநேகிதனுடன் பேசுவது போல, மோசே தன் மாம்ச சரீரத்தில் இருந்த பொழுதே தேவனோடு உறவாடினார். தேவனுடைய மகிமை பிரத்தியட்சமாய் அவருடைய முகத்தில் பிரகாசித்தது. இப்படிப்பட்ட மகிமையான அனுபவங்களை, தன் மாம்சரீரத்தில் இருந்த பொழுதே பெற்ற மோசேயின் சரீரத்தை தேவனே பாதுகாத்தார். **உபாகமம் 34:7** கூறுகிறது, **“மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை.“.** ஆம், தேவனுடைய மகிமை தங்கிய மோசேயின் மாம்ச சரீரத்தின் பெலன் கூட குறையாமல் ஆண்டவர் பார்த்துக் கொண்டார். தன் வாழ்வின் இறுதிவரை முழு பெலத்தோடு ஊழியத்தை செய்தார். **உபாகமம் 34:8** இல், **“இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள்; மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடின நாட்கள் முடிந்தது.“.** இங்கு மோசே மரித்துப்போனதை அறிந்த அவர்கள் அவருக்காக 30 நாள் துக்கம் கொண்டாடினர். **உபாகமம் 34:9** கூறுகிறது, **“மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை**

**வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.“**. இங்கு மோசேயின் மேலிருந்த அபிஷேகம் யோசுவாவிற்குள் கடந்து வந்ததை கண்ட மக்கள், மோசே கூறியபடியே யோசுவாவிற்கு கீழ்ப்படிகிறதை காணலாம்.

இறுதியாக, **உபாகமம் 34:10-12** வசனங்களில், **“மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்.“**. இங்கு மோசேயின் ஊழியத்திற்கான முடிவுரையை வேதமே மேற்கண்ட வசனங்களில் அருமையாக தருகிறது. ஆம் எகிப்தில் பார்வோன் முன்பாக ஆரம்பித்த அவருடைய ஊழியம் 40 வருட காலமாக, இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தொடர்ந்தது. இந்த 40 வருட காலத்தில், தேவனின் மூலமாக அவருடைய கட்டளையின்படியே அவர் செய்த அற்புதங்களும், வல்லமையான செயல்கள் யாவும், இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்காகவும், அவர்கள் கானான் சென்று சேர்வதற்காகவுமே நடத்தப்பட்டது. ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பாவ உலகாகிய இவ்எகிப்தில் இருந்து நம்மை விடுவித்து, இவ்வனாந்தர பாதையான, இவ்வுலக வாழ்க்கையின் வழியாய் நம்மை பரம கானானான பரலோக ராஜ்யத்தில் சேர்க்கவே வந்தார். இறுதியாக வசனம் 12 இல் **கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல** என்ற வார்த்தை மிகவும் அற்புதமானது. மனிதர்கள் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை மோசே பெற்றிருந்ததை இது குறிப்பிடுகிறது. **எபிரெயர் 3:5,6** வசனங்களில், **“சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்;“**. ஆம் உண்மையில் இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயை காட்டிலும் சிறந்த தலைவன் பழைய ஏற்பாட்டு காலத்தில் கிடைக்கவில்லை. ஆனால், நமக்கோ மோசேயை காட்டிலும் பெரியவரான கிறிஸ்துவே, தேவனுடைய குமாரனாக, நம்மையும் தேவனுடைய பிள்ளைகளாக, பரலோக ராஜ்ஜியத்திற்கு கூட்டி சேர்க்கிறவராக கிடைத்துள்ளார். மோசே ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக, தீர்க்கதரிசியாக, ஆசாரியனாக, பரிந்து பேசுகிறவராக, இஸ்ரேல் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்தார். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இன்று நம் அனைவருக்கும் அப்படியே இருக்கிறார். இப்படியாக கிறிஸ்துவுக்கு நிழலாக பழைய ஏற்பாட்டில், இஸ்ரேல் மக்களை வழிநடத்திய மோசேக்காக ஆண்டவரை துதிப்போமாக. மோசேயை காட்டிலும் மேலானவரான கிறிஸ்துவையே நமக்காக தந்ததற்காகவும் ஆண்டவரை துதிப்போமாக. ஆமென், அல்லேலூயா.